175266

மூவர் தேவாரத்
திருமுறை

Q23;417xi
N27
175266

உ

திருச்சிற்றம்பலம்

மூவர்

# தேவாரத் திருமுறை

ஆளுடைய பிள்ளையார் என்னும்

## திருஞானசம்பந்த சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

## தேவாரப் பதிகங்கள்

## முதற்பகுதி

OFFICE OF THE REGISTRAR OF ...
No.
19 SEP 1927
MADRAS

சென்னை:

வித்வான். சி. வே. விவேகாநந்த முதலியாரவர்களால்
பல பிரதிகளைக்கொண்டு பரிசோதித்து
அவர்தம் நூதன விசேஷ ஆராய்ச்சிக் குறிப்புகளுடன்

தேவார திருப்புகழ் சைவச்சபை ஸ்தாபகர்
பண்டித. புதுவை. முத்துவடிவேலானந்தம்
அவர்களால்
வெளியிடப்பட்டன.

பிரபவ௵ வைகாசி௴

[காபிரைட்.]

125266
Q23:4 ... 
X(12)

PUBLISHED BY

M. V. AMBALDASAN CO.,

Siddhanta Nool Pathippu Nilayam,

Royapettah Post, Madras.

1927.

கந்தன் பிரஸ், 32, பிராட்வே, மதராஸ்.

# நூன்முகம்

அதீத சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்தத் தெய்வ மணம் யாண்டும் வீசிப் பரிமளிக்கும் இச் செந்தமிழ் நாட்டின்கண், பசு கரணங்களே பதி கரணங்களாக வசியப்பெறும் உண்மைச் சிவனடியார்கள், உலகம் உய்வான்பொருட்டுப் பரமேசுரனுல் அதிட்டிக்கப் பெற்ற பேராற்றல் நிமித்தமாகத் திருவாய் மலர்ந்தருளிய தேவாரத் திருமுறைகள் சாயுச்சியப் பதவிக்குச் சாலச் சிறந்தன ஆகலான், அத் தமிழ் வேதத்தைப் பெரும் பகுதிகளாக வெளியிடும் பெற்றிமை தோன்றுவதாயிற்று. மூவரின் முதலேழு திருமுறைகளைத் தற்போது பரிசோதித்து வெளியிட ஒன்றுக்கும் பற்ருத அடியேனுக்கும் ஓர் அமயம் வாய்த்ததொரு நினைப்பு எழுந்தோறும் எழுந்தோறும் என்னைப் பூரிக்கச் செய்கின்றது. அல்லற் படுகுழியில் வீழ்ந்து அயரும் என்போலியர்க்கு இதுபோன்ற மாப்பெருங் கைங்கரியத்தில் தலையிடுதலான மகத்தான புண்ணியம் எல்லாம் வல்ல இறைவன் ஆணையாற் கிடைத்ததென்று அவனருளாலே அவன்தாள் வணங்கி நின்றனன். அற்ப அறிவும் சொற்பப் படிப்பும் உடைய அடியேனுடைய ஆராய்ச்சிக் குறிப்புக்களுள் அன்பர்கள் குற்றம் நீக்கி நற்றம் பாராட்டுவரென்று துணிகின்றேன். சைவ சித்தாந்திகள் இத் தெய்வத் திருமுறையை வந்திப்பாராக. உண்மை அடியார்கள் அடியேற்கு இன்னும் அதிக ஊக்கம் உண்டாக ஆசிகள் அளிக்க. சைவமணம் எங்கும் வீசுக. இசைவல்ல பத்தர்ப் பல்லாண்டு இசைக்க. உலகம் நிலைத்து வாழ்க.

இங்ஙனம் :—

சி. வே. விவேகாநந்தன்

சென்னை,
15—5—27.

# கருத்து

முத்தமிழ் முழுதொருங் குணர்ந்த மெய்த்தகைப் புலவீர்காள்!

சிந்தையு மனமுஞ் செல்லா நிலைமைத்தாய அந்தமி லின்பத் தழிவில் வீட்டினைப் பவக்கடல்வீழ்ந் தலமரு மாக்களடைய இன்றியமையாத் துணையாய் இலங்குவன, நம் சைவ சமயாச்சாரியர் மூவர் திருவாய் மலர்ந்தருளிய தேவாரப் பதிகங்களன்றோ? திருத்தொண்டர் புராணமாம் பெரிய புராணத்துள், அச்சைவ சிகாமணிகள் மூவரது சரிதைகளைச் சிவபெருமான் பேரருளாற் றிருவாய் மலர்ந்தருளிய ஸ்ரீமத் சேக்கிழார் பெருந்தகையார், ஸ்தல வரிசையாக, ஆங்காங்கடி யெடுத்துக் காட்டப்பட்ட தேவாரப் பதிகங்களே யாயினும் அச் சைவசமய குரவர்கட்கு வழியடிமை பூண்டொழுகி யன்னோர் சரிதைகளையும் விபவங்களையும் பிரசங்க ரூபமாக நன்மை கடைப்பிடித்தொழுக மெய்யன்பர்கட்குச் செவியுறுத்திவரும் பற்பல புராணிக திலகர்களும் அவ்வவ் வமயங்களில் ஓதல்வேண்டுமென்பது ஆன்றோர் கொள்கை ஆதலால், மேற்குறித்த தேவாரப் பதிகங்கள் மாத்திரம் சைவப்பிரசங்க ஞானபாநு கா. ராஜாராம் பிள்ளையவர்கள் நன்முயற்சியுடன், சிவநேசமுடைய பலரும் கேட்டுக்கொண்ட வண்ணம் சஞ்சிகை மூலம் அச்சிடப்படுகின்றன.

இப்போது திருஞானசம்பந்த சுவாமிகள் திருத்தேவாரம் 1927 ஞ மேமீ முதற்கொண்டு எட்டு பாரங்களாக அச்சிடப்பட்டு வருகின்றன. இவை முடிவுபெற்றபின், திருநாவுக்கரசு சுவாமிகள்-சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தேவாரமும் முறையே ஆரம்பஞ் செய்யப்படும்.

இங்ஙனம்:—

பதிப்பாசிரியர்.

பண்டித, புதுவை-முத்துவடிவேலானந்தம்

# திருஞான சம்பந்த சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்.

---

ஆளுடைய பிள்ளையார் ஞானப்பாலுண்டது.

நீர்வள நிலவளங்களால் செழிப்புற்று ஓங்கிய சோழ நாட்டில் தெய்விகம் நிறைந்த சீகாழிப் பதியில் வேதியர் குலத்து வந்த சிவபாத விருதயர்க்கும் அவர்தம் இல்லக்கிழத்தியார்ப் பகவதியாருக்கும் தாங்கள் பன்னாள் ஆற்றிய நோன்பு காரணமாகப் புத்திரர் ஒருவர் திரு அவதாரஞ் செய்தனர். தமக்கு மூன்றாம் ஆண்டு நிகழுங்காலை, நீராடச் சௌற சிவபாத விருத்தியரைப் பின்தொடர்ந்து அவர் ஜபமாற்றிக் கொண்டிருக்கையில் திருக்குளக் கரையில் நின்றவண்ணமாய்ப் பண்டைய வுணர்ச்சியால் தமதுமுன் காணப்பட்ட திருத்தோணிச் சிகரத்தைக்கண்டு இப்பிள்ளையார் "அம்மே, அப்பா" என்று அழுதலும், உமாதேவியார் சிவபெருமானுடன் கீழிறங்கிப் பொற்கிண்ணத்தில் தமது திருமுலைப் பாலைக் கறந்து சிவஞானத்தையுங் குழைத்து ஊட்டியருளினார். ஜபமாற்றிக் கரையேறிய வேதியர்த் தமது குழவியின் வாயினின்றும் பால் ஒழுகுதலைக் கண்டு அப்பால் யார்தந்ததென்று அதட்டுதலும், பிள்ளையார்த் தமது வலக்கரத்தின் பெருவிரலைத் தூக்கி ஆகாயத்திலே இடபாரூடராய் அம்மையாருடன் தோன்றிய சிவபெருமானைச் சுட்டி வேதசாரமாகப் பிரணவத்தைத் தகரமெய்யோடு புணர்த்தித் தமிழில் "தோடுடைய செவியன்" என்று தொடங்கித் தமக்கு ஞானம் நல்கியவன் "பிரமாபுர மேவியபெம்மா னிவனன்றே" என்றொரு திருப்பதிகம் ஓதுவாராயினர். சிவபாத விருதயர்ப் பேரானந்தம் எய்திப் பல சிவனடியார்களுடன் பிள்ளையாரைத் தூக்கிக்கொண்டு திருக்கோயிலையடைய, பிள்ளையார் ஆண்டுப் பல பதிகங்களைப் பாடியருளினார்.

பொற்றாளம் பெற்றது.

பிள்ளையார் மறுதினம் திருக்கோலக்காவிலுள்ள திருக்கோயிலில் பதிகம் பாடுங்காலையில் இறைவன் திருவுளப் பாங்கின்படி திருவைந்தெழுத்துப் பொறித்த பொற்றாளம் அவர்தம் திருக்கரத்தில் வந்தது. திருநனிபள்ளியில் தம்மை வந்தடைந்த திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவர் மனைவியார் விறலியாரும் சிவபெருமானுக்கு யாழ் வாசிக்

கச்செய்து அத் தம்பதிகளின் வேண்டுகோட் கிரங்கி தம்முடனேயே யிருந்து வசித்துத் தம்முடைய திருப்பதிகங்கள் யாவையும் யாழிலிட்டுப் பாட இசைந்தனர். தில்லைக்குச் சென்று "கற்றாங் கெரியோம்பி" முதலிய திருப்பதிகங்களைப் பாடிய பின்னர்த் திருவேட்களத்தில் தங்கியிருந்து தில்லைக்கு மறுபடியும் வரும்போது ஆங்குள்ள மூவாயிரம் அந்தணர்களும் சிவகண நாதர்களாகத் தமக்குத் தோன்றுதலும் அவர்களை யாழ்ப்பாணருக்குக் காட்டி வணங்கித் திருக்கோயிலை யடைந்து "ஆடினாய் நறு நெய்யொடு" என்னும் திருப்பதிகம் ஓதினார். பிறகு திருநீலகண்ட யாழ்ப்பாணரின் வேண்டுகோட்கிரங்கி அவர் அவதரித்த தலமாகிய திருவெருக்கத்தம் புலியூரையும் திருமுதுகுன்றம் திருப்பெண்ணாகடம் என்னும் திருத்தலங்களையுந் தரிசித்துத் திருத்தூங்கானை மடத்தில் எழுந்தருளினார்.

**முத்துச்சிவிகை முதலியன பெறுதல்.**

ஆளுடைய பிள்ளையார் அவ்விடத்தினின்றும் திருநெல்வாயிலரத்துறையைத் தரிசிப்பான் வேண்டித் தமது திருவடி நோவப் பையப்பைய நடந்து மாறன்பாடி என்னும் பதியில் தங்கினார். திருநெல்வாயிலரத்துறைப் பெருமான் தமது பிள்ளையார் நடந்து வருதலைப் பொறாராய் ஆங்குள்ள அந்தணர்களுடைய கனவிற்றோன்றிப் பிள்ளையாருக்கு முத்துச்சிவிகையும், முத்துக்குடையும், முத்துச்சின்னமும் கொண்டுபோய்க் கொடுக்குமாறு கட்டளையிட்டார்; இவ்வாறே பிள்ளையார் சொப்பனத்திலுந் தோன்றி அவைகளைப் பெறுக என்று இசைத்தார். விடியற்காலையில் அந்தணர்கள் சிவ சின்னங்களுடன் பிள்ளையாரை எதிர்கொண்டழைத்தனர். அதுகாலை அவர் "எந்தையீசன்" என்னும் திருப்பதிகத்தை யருட்செய்து அருளே திருமேனியாகக்கொண்ட சிவபெருமானார்தம் பேரருளை வியந்து ஆண்டு சிலகாலம் தங்கியிருந்தனர். பிறகு தோணியப்பரைத் தரிசிப்பான் வேண்டித் திருவிசயமங்கை, திரும்புறம்பயம் முதலிய தலங்களைத் தரிசித்துச் சண்டேசுர நாயனாரின் திரு அவதாரத் தலமாகிய திருச்சேய்ஞலூரை யடைந்ததும், சிவிகையை விட்டிறங்கிப் பைய நடந்து திருக்கோயிலுட் சென்று "பீரடைந்த பாலதாட்ட" என்னுந் திருப்பதிகத்தை ஓதிப் பின்னர்த் திருப்பனந்தாள், திருக்கடம்

பூர், திருநாரையூர் என்னுந் தலங்களைத் தரிசித்துத் திருத்தோணி புரத்தை யடைந்தனர்.

அந்தணர்க்குப் பஞ்சாக்கிர உபதேசம் செய்தல்.

பிறகு சீகாழியில், ஓதாதுணர்ந்த ஆளுடைய பிள்ளையார்தம் உபநயனச் சடங்கு நிறைவேறுகையில் மந்திரோபதேசம் செய்யவந்த அந்தணர்களுக்குத்தாம் சிவபெருமானை நினைந்து தொழுது "துஞ்சலுந் துஞ்சல்" என்னும் அருட்பதிகம் இயற்றி "வேதியர்க் கந்தியுண் மந்திரம் அஞ்செழுத்துமே" என்று ஆறி வுறுத்தினர்.

பிள்ளையாரும் அப்பரும் சந்தித்தல்.

அக்காலைத் திருச்சிற்றம்பலத்தே ஸ்ரீ நடராசப் பெருமானுரின் அருட்டுறையில் திளைத்து நின்ற திருநாவுக்கரசு சுவாமிகள் ஆளுடைய பிள்ளையாருடைய அருள்தகைமையைக் கேள்வியுற்று அவரைத் தரிசிக்கச் சீகாழிக் கெழுந்தருளும்போது, இப்பெருந் தகையாரின் வருகையைக் கேட்டு எதிர்கொண்டு வணங்கித் தமது திருமாளிகையில் இருத்தி உபசரித்துத் தோணியப்பரைத் தரிசிக்கச் செய்தனர். சின்னாட் கழிந்து திருநாவுக்கரையர் விடைபெற்றுத் திரும்பியதும் பிள்ளையார்த் திருத்தோணியப்பர்மீது திருமொழிமாற்று, திருமாலைமாற்று, திருவழிமொழி, திருவியமகம், திருஏகபாதம், திருவிருக்குக்குறள், திருவெழுகூற்றிருக்கை முதலிய பல திருப்பதிகங்களைப் பாடியருளினார்.

முயலகன் என்னும் நோயை நீக்குதல்.

பிறகு பிள்ளையார் எல்லாச் சிவதலங்களையும் தரிசிப்பான் வேண்டி முத்துச்சிவிகையில் ஆரோகணித்து, முத்துக்குடை முதலிய திருச்சின்னங்களுடனும் சிவனடியார்களுடனும் தமது தந்தையாரும் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் உடன்வர மேற்றிசையேகித் திருப்புள்ளிருக்குவேளூர், திருநின்றியூர், திருப்புன்கூர், திருவையாறு, திருமழபாடி முதலிய தலங்களைத் தரிசித்து மழநாட்டில் காவிரி நதியின் வடபாலுள்ள திருப்பாச்சிலாச்சிரமத்திற்கு வந்தனர். ஆங்குள்ள மன்னனுய கொல்லி முழவனின் புத்திரி முயலகன் என்னும் நோயால் வருந்தித் திருக்கோயிலின் சந்நிதியில் சரண்புகுந் திருந்

தாள். ஆளுடைய பிள்ளையார் வருகையைக் கேட்ட மன்னன் தன் நகரை அலங்கரித்து அவரை வணங்கி எதிர்கொண்டழைத்து திருக்கோயிலிலுள்ள தனது புத்திரியின் நிலைமையை விண்ணப்பித்துக்கொளலும், பிள்ளையார்க் கருணைகூர்ந்து, சிவபெருமானை நினைந்து "துணிவளர்திங்கள்" என்று தொடங்கி "மணிவளர் கண்டரோ மங்கையை வாட மயல்செய்வதோ விவர்மாண்பே" என்று முடித்துத் திருப்பதிகம் ஓத, அம்மங்கையின் கொடிய நோய் ஒழிந்தது. பிள்ளையார் இறைவனின் கருணையை வியந்து ஆங்குச் சின்னாள் தங்கினார்.

பனிச்சுரம் நீக்கியது.

ஆளுடையபிள்ளையார் அவ்விடத்தை விட்டுத் திருவீங்கோய்மலை முதலிய பல தலங்களைத் தரிசித்துத் திருச்செங்குன்றூரை யடைதலும் பனியின் மிகுதியால் சிவனடியார்கள் தளர்வுறுதலைக் கண்டு "அவ்வினைக்கிவ்வினை" என்னும் திருப்பதிகம் ஓதப் பனிச்சுரம் நீங்கியது.

முத்துப்பந்தர் பெற்றது.

பிறகு திருப்பட்டீச்சரத்தை வணங்கச் செல்லுகையில் பிள்ளையாரின் திருமுடிமீது ஒரு சிவபூதம் முத்துப் பந்தரை எடுத்து, "பட்டீசர் எம்மைவிடுத் தருள் புரிந்தார்" என்றுகூறி யளித்தலும், உடன்நின்ற சிவனடியார்கள் முத்துப் பந்தரைத் தாங்கிக்கொண்டனர்.

பொற்கிழி பெறுதல்.

சிவபாதவிருதயர் யாகஞ்செய்யப் பிள்ளையாரைப் பொருள் கேட்ப அவர்த் திருவாவடுதுறையில் சிவபெருமான் முன்னிலையில் "இடரினும் தளரினும்" என்று திருப்பதிகம் பாடுதலும் ஆயிரம்பொன் கொண்ட ஒரு பொற்கிழிச் சிவபெருமானாரின் ஏவலால் ஒரு பூதம் பலிபீடத்தின்மீது வைத்துவிட்டு மறைந்தது. பிறகு அவர் தருமபுரத்தை யடைந்து, சிவபெருமானின் திருவருட் பெருமையெல்லாம் யாழில் அளவுபடாதது என்பதை உலகுக்குக் காட்டுவான்வேண்டி "மாதர் மடப்பிடி" என்னும் திருப்பதிகம் ஓதத் திருநீலகண்ட யாழ்ப்பாணரின் யாழில் அது அடங்காது நின்றது. பாணரும் உண்மை தெளிந்து உய்ந்தனர்.

திருநீலநக்கநாயனார் எம் ஆளுடைய பிள்ளையாரை அயவந்தி என்னும் சிவாலயத்தில் எதிர்கொண்டு வணங்கி உபசரித்தலும் பிள்ளையார் "திருமலர்க்கொன்றை" என்னும் திருப்பதிகத்தில் திருநீலநக்கநாயனாரைப் புகழ்ந்து குறிப்பிட்டனர். பிறகு அவர் திருச்செங்காட்டங்குடிக்கு எழுந்தருளி, ஆங்குள்ள சிறுத்தொண்ட நாயனாரால் எதிர்கொண்டு வணங்கி உபசரிக்கப்பெற்றுக் கணபதீச்சுரம் என்னும் ஆலயத்தில் சிவபெருமானை வணங்கி "பைங்கோட்டு மலர்ப்புன்னை" என்னும் திருப்பதிகம் ஓதி அதில் சிறுத்தொண்டரைச் சிறப்பித் துரைத்தனர்.

**இறந்த வணிகனை எழுப்புதல்.**

பிறகு திருமருகலுக்கு எழுந்தருளி ஆங்கொரு சத்திரத்தில் அரவத்தால் தீண்டி இறந்த வணிகனைச் சார்ந்த கன்னி யொருத்தியின் புலம்பலுக்கு ஆற்றாராய்ச் சிவபெருமானை நினைந்து "சடையாயெனுமால்" என்ற பதிகத்தைத் திருவாய்மலர்ந்து அவ்வணிகனை எழுப்பி அவனுக்கும் அக்கன்னிகைக்கும் மணமாற்றித் திருச்செங்காட்டங்குடியில் எழுந்தருளத் திருமருகலிலுள்ள தமதுதிருக்கோலத்தைச் சிவபெருமான் கணபதீச்சுரத்தில் காட்ட "அங்கமும் வேதமுமோ" என்னும் திருப்பதிகத்தைத் திருவாய்மலர்ந்தருளினார்.

**வாசியிலாக் காசு பெறுதல்.**

அங்கிருந்து பிள்ளையார்த் திருப்புகலூரை யடைந்து வர்த்தமானீச்சரம் என்னும் ஆலயத்தில் புட்பத் திருத் தொண்டில் சிறந்த முருகநாயனாரைச் சிறப்பித்து "ஏறமர்க்கடவுள்" என்னும் திருப்பதிகத்தை யோதி அவ்விடத்திலேயே திருநாவுக்கரசு சுவாமிகளை எதிர்கொண்டு அழைத்து உபசரித்தனர். பின்னர் இவ்விரு சமயாச்சாரியர்களும் பல தலங்களைத் தரிசித்து திருவீழிமிழலையில் தங்கிய காலத்துப் பஞ்சம் என்னும் பெரும்பிணியால் அன்பர்கள் வாட்டமுற்றனர். இஃதோர்ந்த சிவபெருமான் திருக்கோயிலின் கீழ்ப்பீடத்திலும் மேற்பீடத்திலும் ஒவ்வொரு பொற்காசு அருள அவைகளைக் கொண்டு அவர்கள் அடியார்களுக்குத் திருவமுது வழங்கி வந்தனர். வணிகர்கள் அப்பர் காசுக்கு வாசிகேளாது தமது காசுக்குமாத்திரம் வாசிகேட்டலை யறிந்த பிள்ளையார் "அப்பர் கைத்தொண்டு செய்

கின்றமையால் வாசியிலாக் காசுபெற்றூர்" என்று வியந்து, மறு தினம் சிவபெருமான் முன்னிலையில் "வாசிதீரவே காசுநல்குவீர்" என்று பதிகம்பாட அன்று முதல் வாசியிலாக் காசுபெற்றுக் காலந் தாழ்க்காது அடியார்களுக்கு அமுது வழங்கி மகிழ்ந்தனர்.

திருக்கதவம் திறக்கவும் மூடவுஞ் செய்தது.

பிறகு இருவரும் திருமறைக்காட்டிற் கெழுந்தருளி, வேதங்கள் பூசித்துத் திருக்காப்பிட்ட நாள்முதல் திறக்கப்படாத திருக்கதவுடைய திருக்கோயிலை யடைந்ததும் திருநாவுக்கரசு நாயனூர் "இரக்க மோன்றிலீர்" என்னும் திருப்பதிகத்தைப் பாடத் திருக்கதவந் திறந்தது. இருவரும் சிவபெருமானை வணங்கி வெளிவந்து, தினமும் திறக்கவும் மூடவும் வழக்கமாம்படிப் பிள்ளையார் "சதுரம்மறை" என்னும் திருப்பதிகம் ஓதியதும் திருக்கதவம் அடைபட்டது. பிறகு இவ்விரு நாயன்மார்களும் திருவாய்மூருக்குச்சென்று சிவபெருமானின் திருக்கோலத்தைக் கண்டுமகிழ அதுபோது ஆளுடைய பிள்ளையார்த்"தளரிளவளரேன" என்னும் திருப்பதிகத்தைப் பாடியபின் இருவருமாகத் திருமறைக் காட்டுக்குத் திரும்பினர்.

ஆளுடைய பிள்ளையார் மதுரைக்கு எகுதல்.

இஃதிவ்வாறுக, மதுரையில் பாண்டிய மன்னன் சமண மதத்தில் வீழ்ந்து சமணர்களால் சூழப்பட்டுக் கொடிய அந்தகாரத்தில் அமிழ்ந்திருந்தனன். அவன் பத்தினியாராகிய மங்கையர்க் கரசியாரும், மந்திரியாகிய குலச்சிறை நாயனுரும் பாண்டியனுக்குத் தெரியாமல் சைவ சமயத்திலேயே யிருந்துகொண்டுத் தமது மன்னனுக்கும் நாட்டிற்கும் என்று உதிக்குமோ நற்காலம் என்று எதிர்பார்த்து, ஆளுடைய பிள்ளையாரின் பெருமைகளைக் கேட்டறிந்து அவர் மதுரைக்கு எழுந்தருளுமாறு சில பரிசனங்கள் மூலமாக விண்ணப்பித்துக் கொண்டனர். ஈதறிந்த அப்பமூர்த்திகள், சமணர்கள் வலியரும் அதிபாதகர்களும் என்றும், நாள்களும் கோள்களும் வலியில என்றும், பிள்ளையாரின் திருமேனி மிகவும் இளைத்தது என்றும் கூறி மதுரைக்குப் போகாதவாறு தடுத்தனர். பிள்ளையார் அவரைத் தேற்றி "வேயுறு தோளிபங்கன்" என்னும் திருப்பதிகத்தைப் பாடித் திருவிடும்பாவனம் முதலிய தலங்க

ளைத் தரிசித்துக் கொண்டே முத்துச் சிவிகையில் ஏறி மதுரை யை யணுகினர். மந்திரியாராய குலச்சிறை நாயனர் அவரை எதிர்கொண்டு வணங்கி நகருள் அழைத்துப்போகத் திருக் கோபுரத்தைத் தரிசித்த பிள்ளையார் "ஆலவாயாவது மிதுவே" என்னும் திருப்பதிகத்தில் பாண்டிமா தேவியார், குலச்சிறை நாய னர் என்ற இரு சைவ சிகாமணிகளின் திருத்தொண்டைச் சிறப் பித்துத் திருக்கோயிலுட் சென்று "நீலமாமிடற் றாலவாயிலான்" என்னும் திருப்பதிக மோதி சிவதரிசனம் செய்தும் பாண்டிமா தேவியைக் கண்டும் தமக்கென ஏற்பட்ட திருமடத்தில் எழுந்தரு ளினர்.

சமணர்கள் பிள்ளையாரின் திருமடத்தில் தீயிடல்.

இவரது வருகையை யறிந்த சமணர்கள் ஒன்றுகூடி மன்னனை யணுகித் தாங்கள் "கண்டுமுட்டு" எனலும், மன்னன் "கேட்டு முட்டு" என்றனன். மன்னன் அநுமதிகொண்டு அப்பாதகர்கள் எமது பிள்ளையார் எழுந்தருளிய திருமடத்திற் றீயிட்டனர். பிள்ளையார் இதன் உண்மை யுணர்ந்து மன்னனுக்கு நற்புத்தி யூட்டுவான் வேண்டி மிகவும் பரிந்து "செய்யனே திருவாலவாய்" என்னுந் திருப்பதிகத்தில் "அமணர் கொழுவுஞ்சுடர் பையவே சென்று பாண்டியர்க் காகவே" என்று திருவாய் மலர்தலும் அக்கினி வெப் பம் பாண்டியனைப் பற்றுவதாயிற்று.

பாண்டியனின் சுரத்தை நீக்குதல்

பற்றலும், மன்னன் கொடுஞ் சுரத்தால் உணர்வழிந்து கிடந் தான். சமணர்களுடைய பாதகத்தன்மையால் இம்மியும் ஊறுபெறுத ஆளுடைய பிள்ளையாரின் பெருமையை அறிந்த பாண்டிமாதேவியாரும் மந்திரியாரும் தேர்ந்து மன்னனை யணுக, மணி மந்திர ஔடதம் எதனு னும் குறையாத சுரம்பெற்ற அவன் நிலைமையைக்கண்டு வாட்டமுற்ற காலத்துத் தாம் பெருஞ் சித்தர்கள் என்று கர்வமுற்ற சமணர்கள் பீலிகைகளால் மன்னன் உடலைத் தடவினர்கள். நோயின் கொடுமை யால் பீலிகைகள் கருகிப் போயின. பாண்டிமாதேவியாரும் குலச் சிறை நாயனரும் மன்னனுக்கு ஆளுடைய பிள்ளையாரின் தெய் விகத் தன்மையைக் கூறி யவர்க்கு முன்னிரவு இழைத்த அபசாரமே

இத்தகைய வெப்பமாக மாறியதென்றும் அவராற்றான் அந்நோய் நீங்கக்கூடும் என்றுந் தெரிவித்துக்கொண்டனர். மன்னன் அநுமதி கொண்டு அவ்விருவரும் பிள்ளையாரை வணங்கி யழைத்தலும், அவர் திருக்கோயிலுட் சென்று "காட்டுமாவ துரித்துரி" என்னும் திருப்பதிகம் பாடிச் சிவபெருமானாரின் உள்ளக்கருத்தை யுணர்ந்து சமணர்களை யொழித்துச் சிவநெறியைத் தழைவிக்கக் கருதி, "வேத வேள்வியை" என்று திருப்பதிகம் ஓதிக்கொண்டே முத்துச் சிவிகையில் ஏறி மந்திரியார் முன்செலவும் பாண்டிமா தேவியார்ப் பின் வரவும் அரமனைக்கு எழுந்தருளினார்.

பாண்டியன் முடியின் பாரிசத்தில் இடப்பட்டிருந்த ஒரு இரத்தினாதனத்தின்மீது எமது சம்பந்தர் எழுந்தருள, அப்பாண்டியன் அவரைத் தரிசித்து வணங்கித் தேவரீரின் பதியாது என்று விண்ணப்பித்தலும் எமது பிள்ளையார், "பிரமனூர் வேணுபுரம்" என்று தொடங்கி, "கழுமலம் நாம்பரவுமூரே" என்று பதிற் கூறினர். சமணர்கள் இடைப்பட்டுப் பிள்ளையாரே சுர நோயைத் தீர்ப்பினுந் தாங்களுந் தீர்த்ததாக மன்னன் கூறவேண்டு மென்று கேட்க அவன் வஞ்சகங் கூற இசைந்தா னல்லன். அப்போது சமணர்கள் பிள்ளையாரை வாதத்திற் கழைத்தனர். பாண்டிமா தேவியார் பிள்ளையார்த் திருமேனியில் இளைத்தவரென்று கருதி "முதலில் மன்னனின் நோய் தீர்தல் வேண்டும். பிறகு வாதம் பேசலாம்" என்றனர். பிள்ளையார் அம்மையாரைத் தேற்றுவிக்க நினைந்து "மானினேர் விழிமாதராய்" என்னும் திருப்பதிக மோதி ஈன சமணக் குண்டர்களுக்குத் தாம் சற்றும் எளியரன்று என்று தெரிவித்தனர். பாண்டியனின் இடப் பக்கத்து வெப்பத்தைத் தணிப்பதாகச் சபதங் கூறிய சமணர்கள் எவ்வளவோ முயன்றும் பயன் பெறாதது கண்டு மறைந் தொழிந்தனர். பிள்ளையார் "மந்திரமாவது நீறு" என்னும் திருப்பதிகம் பாடி வலப் பக்கத்து நோயை யகற்றியது மன்றி மன்னனின் வேண்டுகோட் கிரங்கி இடப் பக்கத்து நோயையுந் தீர்த்தருளினார்.

பிறகு சமணர்கள் பிள்ளையாரை அக்னியினாலும் சலத்தினாலும் வெல்லக் கருதி யழைத்தனர், உலகம் உய்வான் வேண்டி யாசனும்

அனல்வாதத்தில் வென்றது

இசைந்தான். சபையில் வளர்க்கப்பட்ட தீயில் சமணர்கள் தாங்கள் கற்ற மந்திரத்தை யெழுதி விடுத்தனர். ஆளுடைய பிள்ளையார்த் தமது திருமுறையிற் கயிறு சாத்தித் திருநள்ளாற்றுப் பதிகமாகிய "போக மார்த்த பூண் முலையாள்" என்னும் திருப்பதிகத்தை எடுத்து, சிவபெருமானை வணங்கி, 'எரியிடிற் பழுதிலை யிது மெய்ம்மையே" என்ற கருத்தடங்கிய "தளரிளவளரொளி" என்னுந் திருவருட் பதிகமோதித் திருநள்ளாற்றுப் பதிகத்தை எரியிலிட்டுக் குறித்த நேரங் கழித்து எடுத்தலும் அது பச்சென்றிருக்க யாவர்க்குங் காட்டித் திருமுறையில் சேர்த்துக் கொண்டனர். சமணர்தம் பொய்ம் மந்திரமோ இருந்தவிடந் தெரியாது கருகிப் போயிற்று.

புனல்வாதத்தில் வென்றது.

இனிச் சமணர்கள் புனல்வாதத்துக்குப் பிள்ளையாரை அழைத்தனர். குலச்சிறை நாயனார் இடைப்பட்டு "இதிலும் தோற்பீராயின்" என்றார். சமணர்கள் "தோற்பேமாயின் கழுவேறுவோம்" என்று சபதங்கூறி வைகையாற்றை யடைந்தனர். மன்னனும் ஆயிரக்கணக்கான அடியார்களுஞ் சூழ்ந்துநிற்பப் பிள்ளையார் "வாழ்க அந்தணர்" என்னும் திருப்பதிகத்தைப் பாடி ஓடும் நீரிலிடவும், அத் திருவேடு எதிர்நோக்கிச் சலத்தைக் கிழித்துக்கொண்டு சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்று நிரூபித்தது. அத்திருப்பதிகத்தில் வேந்தனுமோங்குக என்றாராகலின் பாண்டியனின் கூனும் நிமிர்வதாயிற்று. நீரின் எதிரேறிச்சென்ற அத் திருவேட்டை எடுத்துவரக் குலச்சிறைநாயனார் குதிரைமீதேறிப் போதலும்,பிள்ளையார் அது இன்னும் மேற்செல்லாது நிற்க "வன்னியு மத்தமும்" என்னும் அருட்பதிகமோதினர். மந்திரியார் அதனைவணங்கி எடுத்து வந்து பிள்ளையாரிடம் கொடுப்பப் பிள்ளையார் அதனைத் திருமுறையிற் சேர்த்துக் கொண்டனர்.தாங்கள் சபதஞ் செய்துகொண்டவாறு சமணர்கள் கழுவேறினர். சிவ அபராத நிமித்தத்தால் அவர்கள் அங்ஙனம் ஒழிந்தாராகலின் பிள்ளையார் விலக்காது நின்றனர். மன்னனும் தேவியும் மந்திரியும் மற்றுமுள்ள அந்தணர்களும் அடியவர்களும் பிள்ளையாரிடம்

திருநீறு வணங்கிவாங்கித் தமது நெற்றியிலிட்டுச் சிவாநந்தப் பேறெய்தினர். அந்நாளிலிருந்து மதுரையில் சமணமதம் ஒழிந்தது. உண்மைச் சைவசமயம் தழைத்தோங்கியது. அஞ்ஞான இருள் மறைந்தது. சிவ ஞாயிறு தன்னொளி பரப்பி மிளிர்ந்தது.

சிலகாலம் பிள்ளையார் ஆலவாய் அவிர்சடையண்ணலைத் தரிசித்தவராய் மதுரையிலேயே தங்கியிருந்து பாண்டியனுடனும் பாண்டிமாதேவியாருடனும் குலச்சிறை நாயனாருடனும் திருப்பரங்குன்றம், திரு இராமேச்சுரம் முதலிய தலங்களைத் தரிசித்துக் குலச்சிறை நாயனார்தம் ஊராகிய மணமேற்குடியில் சின்னாள் தங்கிப் பின் மதுரையையடைந்துப் பிள்ளையார் சோழ நாட்டுக்குப் போகப் புறப்பட்டனர்.

ஓடக்காரனின்றி ஓடம்விட்டது.

பாண்டியனும் அவன்தேவியும் மந்திரியும் பிரிவாற்றாது தாங்கள் உடன்வரத் துணிதலைக்கண்ட ஆளுடைய பெருமான் அவர்கட்குத் தேறுதல்கூறிச் சைவசமயத்தைக் காக்குமாறு நிறுத்திவிட்டு முத்துச்சிவிகையில் அமர்ந்து சிவசின்னங்களுடன் முள்ளிவாய்க்கரையையணுகி நீர்ப் பெருகிய அவ்வாற்றில் ஓடம் விடுபவரைக் காணாது தாமும் தமது பரிசனங்களும் ஓர் ஓடத்தில் ஏறி "கொட்டமே கமழும்" என்னும் திருப்பதிக மோதிக்கொண்டே அக்கரையிலுள்ள திருக்கொள்ளம் பூதூரை யடைந்து ஆங்குள்ள பெருமானாரை வழிபட்டு நின்றார்.

புத்தர்களைச் சைவர்களாக்கியது.

எமது வள்ளற்பெருமான் திருத்தெளிச்சேரியைவிட்டு நீங்கிச் செல்லுகையில் புத்தநந்தியை முதலாகக் கொண்ட புத்தர்கள் சிவனடியார்கள் சின்னமுதூதலைத் தடுத்தனர். திருமுறையெழுதும் சம்பந்தசரணாலயர் சம்பந்தப்பெருமானது பஞ்சாக்கரப் பதிகத்துள் "புத்தர் சமண் கழுக்கையர்" என்னும் திருப்பாசுரத்தை யோதுதலும் அப்புத்த நந்தியின் தலையில் இடிவிழ அவன் மடிந்தொழிந்தான். மற்ற சமணர்கள் வேறொருவனைத் தலைவனாகக் கொண்டு ஆளுடைய பிள்ளையாரிடம் வாதஞ்செய்துத் தோற்று அடியற்ற மரம்போல வீழ்ந்து விபூதி பெற்றுச் சைவராயினர்.

ஆளுடைய பிள்ளையார்த் திருக்கடவூரைத் தரிசித்துத் திருப்பூந்துருத்தியை யணுகும்போது திருநாவுக்கரசு நாயனார் யாரும் அறியாதவாறு மறைந்து நின்று பிள்ளையாருடைய முத்துச் சிவிகையைத் தாங்கி வருகையில், பிள்ளையார் "அப்பர் எங்குற்றார்" என்று கேட்ப, அப்பர் "தேவரீரைத் தாங்கும் பெரும் பேற்றியில் இங்குற்றேன்" என்று இறும்பூதெய்திக் கூறலும் பிள்ளையார் விரைந்து சிவிகையினின்றுங் குதித்து "தேவரீர் இப்படி நடந்தால் என்பணி யென்னே?" என்று வணங்கிப் பாண்டி நாட்டில் திருவருட் பெருமையைத் தாம் நிலை நிறுத்திய அருளைக்கூறி விடைபெற்றுப் பின் திருவண்ணாமலை முதலிய தலங்களைத் தரிசித்துத் திருவோத்தூரை யடைந்தனர்.

*அப்பர் ஆளுடைய பிள்ளையாரின் சிவிகையைத் தாங்கி வருதல்.*

அத்தலத்திலுள்ள சிவனடியார் ஒருவர் எமது பெருந்தகையாரிடம் வந்து வணங்கி சிவபெருமானுக்கென்று தாம் வளர்த்த பனைகள் யாவும் விண்ணளவு வளர்ந்தும் காயாதொழிந்தமையால் சமணர்கள் தம்மை அடிக்கடி எள்ளுவதை விண்ணப்பித்துத் திருவருள் பாலிக்குமாறு இறைஞ்சா நிற்ப, எமது அருட்பெருந் தகையார்த் திருக்கோயிலுட் சென்று சிவபெருமானை வணங்கிப் "பூத்தேர்ந்தாயன" என்னும் திருப்பதிகத்தில் "குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்" என்று காட்டுதலும் ஆங்குள்ள ஆண்பனைகளெல்லாம் பெண்பனைகளாயின.

*ஆண் பனை பெண் பனையாக்கியது.*

பிறகு ஆளுடைய பிள்ளையார் திருமாகறல், திருக்குரங்கணின் முட்டம் முதலிய பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு காரைக்காலம்மையாரால் தமது திருத்தலையாலே நடந்து பணிந்த திருவாலங்காட்டை யணுகி அதை மிதிக்க அஞ்சி அத்தலத்தின் அருகாமையில் அன்றிரவு தங்கினார். அப்போது ஆலங்காட்டுப் பெருமான் கனவிற்றோன்றி "நம்மைப்பாட மறந்தனையோ" என்ன, அவர் விழித்தெழுந்து "துஞ்ச வருவாரும்" என்னும் திருப்பதிகத்தைத் திருவாய் மலர்ந்தருளினார்.

*திருவாலங் காட்டைத் தரிசித்தல்.*

*திருக்காளத்தியைத் தரிசித்தல்*

அன்றிரவின் நிகழ்ச்சிகளைச் சிவனடியார்களுக்குக் கூறிப் பிள்ளையார் அவ்விடத்தினின்றும் பலதலங்களைத் தரிசித்து திருக்காளத்தி மலையையணுகி அது காளத்தியென்று கூறக் கேட்டு "வானவர்கள் தானவர்கள்" என்னும் திருப்பதிகம் ஓதி மலைமீதேறி வணங்கிக் கண்ணப்பரின் அன்பை வியந்து வியந்து போற்றி அவ்விடத்திலே சில காலந் தங்கிப்பின் திருவேற்காடு, திருவலிதாயம் முதலிய திருப்பதிகளைத் தரிசித்துத் திருவொற்றியூரை யடைந்து வணங்கித் தங்கியிருந்தனர்.

*எலும்பைப் பெண்ணாக்கியது.*

இஃதிவ்வாறாகத் திருமயிலாப்பூரில் சிவபக்தி யடியவர் பக்தியிற் சிறந்த பெருந் தனிகரான சிவநேசர் என்பவர்ப் பன்னாட் செய்த தவங்காரணமாகப் பூம்பாவை யென்றவொரு பெண்கொடியைப் பெற்று வளர்த்துத் திருஞானசம்பந்தமூர்த்திகள் மூன்றாம் ஆண்டில் அம்மையார் ஞானப்பாலுண்டது முதலான எல்லாத் திருவருட் செய்கைகளையுங் கேட்டுப் பேரானந்தமுற்றுத் தாமும் தமது செல்வமும் தமது பெண்ணாகிய பூம்பாவையும் ஞானசம்பந்தர்க்கென்றே அர்ப்பணஞ் செய்தனர். பின்னொருநாள் பூம்பாவை நந்தவனத்திற் மலர்கொய்யுங் காலத்து அரவுகடித்து இறந்தார். சிவநேசர் கரையிலாக் கவலையுள் ஆழ்ந்து அவரைத் தகனஞ்செய்து அவர் தம் சாம்பரையும் என்பையும் ஒரு பெருங்குடத்தில் சேமித்துத் தினமும் அலங்கரித்து ஆளுடைய பிள்ளையார்க்கென்று வைத்திருந்தனர். எமது முத்தமிழ்விரகர் திருவொற்றியூரில் தங்கியிருந்ததை யறிந்து திருமயிலாப்பூருக்கும் திருவொற்றியூருக்கும் நடைப் பந்தரிட்டு, வஸ்திரம்விரித்து, வாழை கமுகு முதலியவைகளால் அலங்கரித்து வழியெல்லாம் அன்னதானமும் சொர்னதானமும் வழங்கிப் பிள்ளையாரை வணங்கித் தமதூருக்கு எழுந்தருளுமாறு இறைஞ்சினர். பிள்ளையார் மனமுவந்து திருமயிலையை யணுகித் திருக் கோயிலுட் சென்று சிவபெருமானைத் தரிசித்துக் குடத்தில் சேமித்து வைக்கப்பெற்ற எலும்பைக் கொண்டுவரச்செய்து திருக்குளக் கரையில் சிவபெருமானை வணங்கி அக்குடத்தைத் திருநோக்கஞ்செய்து

பூம்பாவாய் என்று விளித்து, "மண்ணினிற்பிறந்தார் பெறும்பயன் மதிசூடும் அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல், கண்ணினாலவர் நல்விழாப் பொலிவுகண்டு ஆர்தல் உண்மையாம் எனின் உலகர் முன்வருக" என்று "மட்டிட்ட" என்னும் திருப்பதிகத்தை ஓதியருளுதலும் சாம்பற்கூடிய எலும்புக் கூட்டம் அக்குடத்தில் உருவமாய் மாறியது. அருள் நாத ஒலிகொடுவந்த மற்றப் பாசுரங்களை யெடுத்துத் திருவாய் மலர்ந்து வருகையில் பூம்பாவை பிராண வாயுவும் வடிவும் அழகும் குடத்திற் பொலிய அக்குடத்தை உடைத்துக்கொண்டு வந்துப் பன்னீராட்டைப் பிராயம் மிளிர நடந்து சிவபெருமானை நினைந்து தொழுதுப் பின் எமது திருஞான சம்பந்தர் முன்னிலையில் எதிர்வந்து நின்று தெண்டனிட்டு எழுந்தார். அமரர்கள் அலர் மாரி சொரிய அடியவர்கள் அரகர என்று மெய்ம்மறந்து ஆர்த்தனர். சிவநேசர் சிவாநந்த வாரியில் மூழ்கிப் பிள்ளையாரை வணங்கி அப்பெண்ணைத் தாம் மணந்துகொள்ள இறைஞ்சுதலும், திருவருள் மகிமையை விளக்க வந்த பூம்பாவையை மணத்தல் தகாதென்று பிள்ளையார் வேத சிவாகமங்களின் உண்மைகளை அநுக்கிரகித்துத் திருக் கோயிலுக்குட் சென்றனர். பூம்பாவையாரை வேறொருவருக்கும் மணஞ்செய்து கொடுப்பதில்லையென்று சிவநேசர் முன்போல் கன்னிகா மாடத்தில் வைத்து வளர்த்து வந்தனர்.

திருமணம்.

ஆளுடைய பிள்ளையார்ச் சின்னாள் ஆங்கு எழுந்தருளி யிருந்துப்பின் திருவான்மியூர் முதலிய தலங்களைத் தரிசித்துச் சீகாழியை யடைய, தந்தையாராய சிவபாத விருதயர் இவர்க்கு மணம் பேசினார். முதலில் பிள்ளையார் அதனை மறுத்தாரெனினும் வைதிக நெறியை வளர்க்கவந்த தாம் அவ்வைதிகத்தின்படி திருமணஞ் செய்யத் திருவுளங்கொண்டு இசைந்தனர். திருநல்லூரிலுள்ள நம்பாண்டார் நம்பியின் தவப் புதல்வியை மணப்பான் வேண்டி அந்தணர்களால் காப்புநாண் அணியப்பெற்றுத் தோணியப்பரை வணங்கி முத்துச் சிவிகையில் ஆரோகணித்து சிவ சின்னங்கள் யாவும் பிறங்கப் பஞ்சாக்கிரத்தை யோதிக்கொண்டே திருநல்லூ

ரடைந்து திருமணக் கோலங்கொண்டுத் திருமண மண்டபத்தில் பொற்பீடத்தமா நம்பாண்டார் நம்பியும் அவர் தம் இல்லக் கிழத்தியாரும் பிள்ளையாரைச் சிவபெருமானென்று பாவித்து அவர் தம் திருவடிகளைச் சுத்திசெய்து நீருடன் தங்கள் தவப் புதல்வியாரைத் தாரைவார்த்துக் கொடுத்தார்கள். திருநீலநக்க நாயனர் வேதவிதிப்படி சடங்குக ளாற்றிப் பொரியை அக்னியிலிட்டுச் சிவபெருமானைத் துதிசெய்து கொண்டிருந்தனர்.

சிவசோதியிற் கலத்தல்.

திருஞானசம்பந்த சுவாமிகள் அம்மையாரோடு அக்கினியை வலம்வரப் புறப்பட்டு "அக்னியாவார் சிவபெருமானே" என்று திருவுளங் கொண்டு "இனி இல்லொழுக்கம் பெற்ற நான் இவளோடு இறைவனடியை யடைவேன்" என்று திருமணத்திற்கு வந்த யாவரோடும் திருக்கோயிலுக் கேகிக் "கல்லூர்ப்பெருமணம்" என்னுந் திருப்பதிகத்தைத் திருவாய்மலர்ந்தருள, சிவபெருமான் அவரை நோக்கி "உம்மைச் சேர்ந்தாரோடு இச்சோதியில் வந்தடைக" என்று இசைத்துத் திருக்கோயிலுட்பட எங்கும் சோதி வடிவமாகி அச்சோதியில் ஒரு திருவாயில் வகுத்து அருளினர். ஆளுடைய பிள்ளையார் "நமச்சிவாய" என்னும் மாமந்திரத்தின் மகிமை விளக்கும் "காதலாகிக் கசிந்து" என்னும் திருப்பதிகத்தைத் திருவாய்மலர்ந்து, திருநீலநக்க நாயனர், முருகநாயனர், சிவபாத விருதயர், நம்பாண்டார் நம்பி, திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனர் முதலிய திருத்தொண்டர்களும் அவர்தம் பத்தினி சகிதராய்ச் சுற்றத்தவரும் முத்துச் சிவிகை முதலியவைகளைத் தாங்கிவந்த பரிசனங்களும் அத்திருச்சோதியில் முன்னே நுழைந்தனர். சைவம் வளரவும்,வேதாகம உண்மை விளங்கவும்,சிவபெருமானின் மேன்மையைக் காட்டவும் திருஅவதரித்த ஆளுடைய பிள்ளையாராய திருஞானசம்பந்த சுவாமிகள் என்னும் முத்தமிழ்விரகர் தமது பத்தினியின் கையைப் பற்றியவராய்ச் சிவசோதியில் நுழைந்து சிவமாந் தன்மையை யடைந்தனர்.

திருச்சிற்றம்பலம்

சி. வே. வி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

*ஆளுடையபிள்ளையார் என்னும்

## திருஞானசம்பந்தசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

# தேவாரப் பதிகங்கள்.

## முதற்றிருமுறை.

### பதிகம் 1. திருப்பிரமபுரம்

பண்-நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
எடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. (1)

முற்றலாமையிள நாகமோடேன முளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகல னாப்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடை யார்பெரியார்கழல் கையாற்றொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. (2)

* சிவன் சத்தி இருவராலும் ஆளப்பட்டமையால் ஆளுடைய பிள்ளையார் என்றும், சிவஞானத்தோடு சம்பந்தம் செய்தமையால் திருஞானசம்பந்தமூர்த்தி என்றும் திருநாமங்கள் ஏற்பட்டன.

நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர் நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தவின வெள்வளைசோரவென் னுள்ளங்கவர்கள்வன்
ஊர்பரந்தவுல கின்முதலாகிய வோரூரிதுவென்னப்
பேர்பரந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. (3)

விண்மகிழ்ந்தமதி லெய்ததுமன்றி விளங்குதலையோட்டில்
உண்மகிழ்ந்துபலி தேரியவந்தென துள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தவர வம்மலர்க்கொன்றை மலிந்தவரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. (4)

ஒருமைபெண்மையுடை யன்சடையன்விடை யூரும்மிவனென்ன
அருமையாகவுரை செய்யவமர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல் கொள்ளமிதந்ததோர் காலம்மிதுவென்னப்
பெருமைபெற்றபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. (5)

மறைகலந்தவொலி பாடலோடாடல ராகிமழுவேந்தி
இறைகலந்தவின வெள்வளைசோரவென் னுள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடி யார்பொழினீடுயர் சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. (6)

சடைமுயங்குபுன லன்னனலன்னெரி வீசிச்சதிர்வெய்த
உடைமுயங்குமர வோடுழிதந்தென துள்ளங்கவர்கள்வன்
கடன்முயங்குகழி சூழ்குளிர்கானலம் பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. (7)

வியரிலங்குவரை யுந்தியதோள்களை வீரம்விளைவித்த
உயரிலங்கையரை யன்வலிசெற்றென துள்ளங்கவர்கள்வன்
துயரிலங்கும்முல கிற்பலவூழிக டோன்றும்பொழுதெல்லாம்
பெயரிலங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. (8)

தாணுதல்செய்திறை காணியமாலொடு தண்டாமரையானும்
நீணுதல்செய்தொழி யந்நிமிர்ந்தானென துள்ளங்கவர்கள்வன்
வாணுதல்செய்மக ளீர்முதலாகிய வையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. (9)

புத்தரோடுபொறி யில்சமணும்புறங் கூறநெறிநில்லா
ஒத்தசொல்லவுல கம்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறு கவ்வுரிபோர்த்ததோர் மாயம்மிதுவென்னப்
பித்தர்போலும்பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. (10)

அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கையலர்மேய
பெருநெறியபிர மாபுரமேவிய பெம்மானிவன்றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம் பந்தன்னுரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை தீர்தலெளிதாமே. (11)

திருச்சிற்றம்பலம்.

குறிப்பு:—திருப்பிரமபுரம்

இது பிரமதேவர் பூசித்துப் பேறுபெற்றமையால் பிரமபுரம் எனவும், நடனத்தில் தோல்வியுற்ற காளியம்மைபாரும் காளிதன் என்னும் பாம்பும் பூசித்தமையால் ஸ்ரீகாளி (சீகாழி) எனவும் பெயர்பெறும். இத்தலத்திற்கு வேறு பத்துத் திருப்பெயர்களுண்டு. அவைதாம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, கொச்சைவயம், கழுமலம் என்பன. இவற்றுள் கற்பாந்தத்தில் சிவபெருமான் உமாதேவியாரோடு பிரணவம் என்ற சுத்தமாயையாகிய தோணியில் வீற்றிருந்துத் தாம் அழியாதுநின்ற காரணத்தால் தோணிபுரம் என்றும், உரோமசமுனிவர் ஈண்டு ஞானோபதேசம் பெற்றுத் தம்மலங் கழுவப்பெற்ற காரணத்தால் கழுமலம் என்றும் பெயர்பெற்ற குறிப்புக்கள் இத்தலத்தைச் சிறப்பு செய்வன. ஆளுடைய பிள்ளையாராய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருக்கு மூன்றும் ஆண்டில் பிரமதீர்த்தக் கரையில் திருத்தோணியப்பர் பெரியநாயகியம்மையாருடன் எழுந்தருளி ஞானம் புகட்டி அப் பெருந்தகையாரின் நட்புரிமை கொண்ட பெரும் பெற்றியது.

இத்தலம் தென்இந்திய இருப்புப் பாதையில் ஒரு ஸ்டேஷனாகும். ஸ்டேஷனிலிருந்து சுமார் அரைமைல் தூரத்தில் திருக்கோயில் எழுந்தருளியிருக்கின்றது.

பிரமபுரத்தில் சுவாமி:—பிரமபுரீசர். தேவியார்:—திருநிலைநாயகி
திருத்தோணியில் சுவாமி:—தோணியப்பர். தேவியார்:—பெரிய நாயகி. திருத்தோணிச் சிகரத்தில் சட்டைநாதர்.

(இத்திருப்பதிகம் செந்துறைப் பாடாண்பகுதியில் கிழல் கிழல் கனிமா என்று ஓரடி நாற்சீரான்வந்த கொச்சக ஒருபோகு. தாளம் ஈரொத்து வாரம். நான்கன் பாணி).

## பதிகம் 2. திருப்புகலூர்

பண்-நட்டபாடை

---

திருச்சிற்றம்பலம்

குறிகலந்தவிசை பாடலினானசை யாலிவ்வுலகெல்லாம்
நெறிகலந்ததொரு நீர்மையனாயெரு தேறிப்பலிபேணி
முறிகலந்ததொரு தோலரைமேலுடை யானிடமொய்ம்மலரின்
பொறிகலந்தபொழில் சூழ்ந்தயலேபுய லாரும்புகலூரே. (1)

காதிலங்குகுழை யன்னிழைசேர்திரு மார்பனொருபாகம்
மாதிலங்குதிரு மேனியினான்கரு மானினுரியாடை
மீதிலங்கவணிந் தானிமையோர்தொழ மேவுமிடஞ்சோலைப்
போதிலங்குநசை யால்வரிவண்டிசை பாடும்புகலூரே. (2)

பண்ணிலாவும்மறை பாடலினானிறை சேரும்வளையங்கைப்
பெண்ணிலாவவுடை யான்பெரியார்கழ லென்றுந்தொழுதேத்த
உண்ணிலாவியவர் சிந்தையுணீங்கா வொருவனிடமென்பர்
மண்ணிலாவும்மடி யார்குடிமைத்தொழின் மல்கும்புகலூரே. (3)

நீரின்மல்குசடை யன்விடையன்னடை யார்தம்மரண்மூன்றுஞ்
சீரின்மல்குமலை யேசிலையாகமு னிந்தன்றுலகுய்யக்
காரின்மல்குகட னஞ்சமதுண்ட கடவுள்ளிடமென்பர்
ஊரின்மல்கிவளர் செம்மையினாலுயர் வெய்தும்புகலூரே. (4)

செய்யமேனிவெளி யபொடிப்பூசுவர் சேரும்மடியார்மேல்
பையநின்றவினை பாற்றுவர்போற்றிசைத் தென்றும்பணிவாரை
மெய்யநின்றபெரு மானுறையும்மிட மென்பரருள்பேணிப்
பொய்யிலாதமனத் தார்பிரியாதுபொ ருந்தும்புகலூரே. (5)

கழலினோசைசிலம் பின்னொலியோசை கலிக்கப்பயில்கானில்
குழலினோசைகுறட் பாரிடம்போற்றக் குனித்தாரிடமென்பர்
விழவினோசையடி யார்மிடைவுற்று விரும்பிப்பொலிந்தெங்கும்
முழவினோசைமுந் நீரயர்வெய்த முழங்கும்புகலூரே. (6)

வெள்ளமார்ந்துமிளிர் செஞ்சடைதன்மேல் விளங்கும்மதிசூடி
உள்ளமார்ந்தவடி யார்தொழுதேத்த வுகக்கும்மருடந்தெம்
கள்ளமார்ந்துகழி யப்பழிதீர்த்த கடவுள்ளிடமென்பர்
புள்ளையார்ந்தவய லின்விளைவால்வள மல்கும்புகலூரே. (7)

தென்னிலங்கையரை யன்வரைபற்றி யெடுத்தான்முடிதிண்டோள்
தன்னிலங்குவிர லானெரிவித்திசை கேட்டன்றருள்செய்த
மின்னிலங்குசடை யான்மடமாதொடு மேவும்மிடமென்பர்
பொன்னிலங்குமணி மாளிகைமேன்மதி தோயும்புகலூரே. (8)

நாகம்வைத்தமுடி யானடிகைதொழு தேத்தும்மடியார்கள்
ஆகம்வைத்தபெரு மான்பிரமன்னொடு மாலுந்தொழுதேத்த
ஏகம்வைத்தவெரி யாய்மிகவோங்கிய வெம்மானிடம்போலும்
போகம்வைத்தபொழி லின்னிழலான்மது வாரும்புகலூரே. (9)

செய்தவத்தர்மிகு தேரர்கள்சாக்கியர் செம்பிற்பொருளல்லாக்
கைதவத்தர்மொழி யைத்தவிர்வார்கள் கடவுள்ளிடம்போலும்
கொய்துபத்தர்மல ரும்புனலுங்கொடு தூவித்துதிசெய்து
மெய்தவத்தின்முயல் வாருயர்வானக மெய்தும்புகலூரே. (10)

புற்றில்வாழுமர வம்மரையார்த்தவன் மேவும்புகலூரைக்
கற்றுநல்லவவர் காழியுண்ஞானசம் பந்தன்றமிழ்மாலை
பற்றியென்றும்மிசைப் பாடியமாந்தர் பரமன்னடிசேர்ந்து
குற்றமின்றிக்குறை பாடொழியாப்புக ழோங்கிப்பொலிவாரே. (11)

திருச்சிற்றம்பலம்

குறிப்பு:—திருப்புகலூர்.

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் சரண்புகுந்த தலமாகலின் சரண்யபுரம் என்றும், அக்னி பூசித்துப் பேறு பெற்றமையால், அக்னீசம் என்றும், புன்னையை ஸ்தலவிருக்ஷமாகக் கொண்டதால் புன்னைவனம் என்றும் வழங்கப் பெறும். திருநாவுக்கரசுநாயனார் உழவாரஞ்செய்து நவமணிகளையும் பருக்கைக்கற்களையும் ஒன்று சேர்த்து வாவியில் எறிந்துத் தம்மைச் சோதிக்க வந்த அரம்பாதியர்களை வெறுத்துப் பலதிருத்தாண்டகங்களும் பதிகங்களும் பாடப் பெற்ற தலம். பின்னர் ஸ்ரீசுந்தரமூர்த்திநாயனார் கோயிற்றிருப்பணிக்காகச் செங்கற்களைப் பொன்னாக்கிய பெருமையும் வாய்ந்தது. இங்கு பூதபௌஷ்ய வர்த்தகமான லிங்கங்கள் உண்டு. முருகநாயனார் ஆளுடைய பிள்ளையாரை கண்டு சந்தித்த குறிப்புமுடையது.

இத்தலம் சோழநாட்டில் காவேரிக்குத் தென்கரையில் நன்னிசித்திலிருந்து கிழக்கே 4 மைலில் உள்ளது.

சுவாமி-அக்னீசர்:—கோணேசர்
தேவியார்:—கருந்தார்குழலி
தீர்த்தம்:—அக்னிதீர்த்தம்

---

## பதிகம் 3. திருவலிதாயம்

பண்-நட்டபாடை

---

திருச்சிற்றம்பலம்

பத்தரோடுபல ரும்பொலியம்மல ரங்கைப்புனறூவி
ஒத்தசொல்லியுல கத்தவர்தாந்தொழு தேத்தவுயர்சென்னி
மத்தம்வைத்தபெரு மான்பிரியாதுறை கின்றவலிதாயம்
சித்தம்வைத்தவடி யாரவர்மேலடை யாமற்றிடர்நோயே. (1)

படையிலங்குகர மெட்டுடையான்படி றாகக்கனலேந்திக்
கடையிலங்குமனை யிற்பலிகொண்டுணுங் கள்வன்னுறைகோயில்
மடையிலங்குபொழி லின்னிழல்வாய்மது வீசும்வலிதாயம்
அடையநின்றவடி யார்க்கடையாவினை யல்லற்றுயர்தானே. (2)

ஐயனொய்யன்னணி யன்பிணியில்லவ ரென்றுந்தொழுதேத்தச்
செய்யன்வெய்யபடை யேந்தவல்லான்றிரு மாதோடுறைகோயில்
வையம்வந்துபணி யப்பிணிதீர்த்துயர் கின்றவலிதாயம்
உய்யும்வண்ணந்நினை மின்னினைந்தால்வினை தீருந்நலமாமே. (3)

ஒற்றையேறதுடை யானடமாடியோர் பூதப்படைசூழப்
புற்றினாகமரை யார்த்துழல்கின்றவெம் பெம்மான்மடவாளோ
டுற்றகோயிலுல கத்தொளிமல்கிட வுள்கும்வலிதாயம்
பற்றிவாழும்மது வேசரணாவது பாடும்மடியார்க்கே. (4)

புந்தியொன்றிநினை வார்வினையாயின தீரப்பொருளாய
அந்தியன்னதொரு பேரொளியானமர் கோயிலயலெங்கும்
மந்திவந்துகடு வன்னொடுங்கூடி வணங்கும்வலிதாயஞ்
சிந்தியாதவவர் தம்மடும்வெந்துயர் தீர்தலெளிதன்றே. (5)

ஊனியன்றதலை யிற்பலிகொண்டுல கத்துள்ளவரேத்தக்
கானியன்றகரி யின்னுரிபோர்த்துழல் கள்வன்சடைதன்மேல்
வானியன்றபிறை வைத்தவெம்மாதி மகிழும்வலிதாயந்
தேனியன்றநறு மாமலர்கொண்டுநின் றேத்தத்தெளிவாமே. (6)

கண்ணிறைந்தவிழி யின்னழலால்வரு காமன் னுயிர்வீட்டிப்
பெண்ணிறைந்தவொரு பான்மகிழ்வெய்திய பெம்மானுறைகோயில்
மண்ணிறைந்தபுகழ் கொண்டடியார்கள் வணங்கும்வலிதாயத்
துண்ணிறைந்தபெரு மான்கழலேத்தநம் முண்மைக்கதியாமே. (7)

கடலினஞ்சமமு துண்டிமையோர்தொழு தேத்தநடமாடி
அடலிலங்கையரை யன்வலிசெற்றரு ளெம்மானமர்கோயில்
மடலிலங்குகமு கின்பலவின்மது விம்மும்வலிதாயம்
உடலிலங்குமுயி ருள்ளளவுந்தொழ வுள்ளத்துயர்போமே. (8)

பெரியமேருவரை யேசிலையாமலை வுற்றுரெயின்மூன்றும்
எரியவெய்தவொரு வன்னிருவர்க்கறி வொண்ணாவடிவாகும்
எரியதாகியுற வோங்கியவன்வலி தாயந்தொழுதேத்த
உரியராகவுடை யார்பெரியாரென வுள்கும்முலகோரே. (9)

ஆசியாரமொழி யாரமண்சாக்கிய ரல்லாதவர்கூடி
ஏசியீரமில ராய்மொழிசெய்தவர் சொல்லைப்பொருளென்னேல்
வாசிதீரவடி யார்க்கருள்செய்து வளர்ந்தான்வலிதாயம்
பேசுமார்வமுடை யாரடியாரெனப் பேணும்பெரியோரே. (10)

வண்டுவைகும்மண மல்கியசோலை வளரும்வலிதாயத்
தண்டவாணனடி யுள்குதலாலருண் மாலைத்தமிழாகக்
கண்டல்வைகுகடற் காழியுண்ஞானசம் பந்தன்றமிழ்பத்துங்
கொண்டுவைகியிசை பாடவல்லார்குளிர் வானத்துயர்வாரே. (11)

திருச்சிற்றம்பலம்

குறிப்பு:—திருவலிதாயம்.

இது பாடி என்று வழங்கப்பெறும். அநுமார், பிரகஸ்பதி முதலியவர்களால் பூசிக்கப்பெற்றது.

இது நடுநாட்டில் வில்லிவாக்கம் ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே 2 மைலில் உள்ளது.

சுவாமி:—வலிதாயநாதர்
தேவியார்:—தாயம்மை

## பதிகம் 4. ஸ்ரீபுகலியும்—திருவீழிமிழலையும்

வினாவுரை.

பண்-நட்டபாடை

---

திருச்சிற்றம்பலம்

மைம்மரு பூங்குழற் கற்றைதுற்ற வாணுதன் மான்விழி மங்கையோடும், பொய்ம்மொழி யாமறை யோர்களேத்தப் புகலி நிலாவிய புண்ணியனே, எம்மிறை யேயிமை யாதமுக்க ணீசவெ னேசவி தென்கொல்சொல்லாய், மெய்ம்மொழி நான்மறை யோர்மிழலை விண்ணிழி கோயில் விரும்பியதே. (1)

கழன்மல்கு பந்தொடம் மானைமுற்றில் கற்றவர் சிற்றிடைக் கன்னிமார்கள், பொழின்மல்கு கிள்ளையைச் சொற்பயிற்றும் புகலி நிலாவிய புண்ணியனே, எழின்மல ரோன்சிர மேந்தியுண்டோ ரின்புறு செல்வமி தென்கொல்சொல்லாய், மிழலையுள் வேதிய ரேத்தி வாழ்த்த விண்ணிழி கோயில் விரும்பியதே. (2)

கன்னிய ராடல் கலந்துமிக்க கந்துக வாடை கலந்துதுங்கப், பொன்னியன் மாட நெருங்குசெல்வப் புகலி நிலாவிய புண்ணியனே, இன்னிசை யாழ்மொழி யாளோர்பாகத் தெம்மிறை யேயிது வென்கொல்சொல்லாய், மின்னிய னுண்ணிடை யார்மிழலை விண்ணிழி கோயில் விரும்பியதே. (3)

நாகப ணந்திக ழல்குன்மல்கு நன்னுதன் மான்விழி மங்கையோடும், பூகவ னம்பொழில் சூழ்ந்தவந்தண் புகலி நிலாவிய புண்ணியனே, ஏகபெ ருந்தகை யாயபெம்மா னெம்மிறை யேயிது வென்கொல்சொல்லாய், மேகமு ரிஞ்செயில் சூழ்மிழலை விண்ணிழி கோயில் விரும்பியதே. (4)

சந்தள றேறுத டங்கொள்கொங்கைத் தையலொ டுந்தள ராதவாய்மைப், புந்தியி னான்மறை யோர்களேத்தும் புகலி நிலாவிய புண்ணியனே, எந்தமை யாளுடை யீசவெம்மா னெம்மிறை யேயிது வென்கொல்சொல்லாய், வெந்தவெண் ணீறணி வார்மிழலை விண்ணிழி கோயில் விரும்பியதே. (5)

சங்கொளி யிப்பி சுறுமகரங் தாங்கி நிரந்து தரங்கமேன்மேற்,
பொங்கொலி நீர்சுமந் தோங்குசெம்மைப் புகலி நிலாவிய புண்ணி
யனே, எங்கள்பி ரானிமை யோர்கள்பெம்மா னெம்மிறை யேயிது
வென்கொல்சொல்லாய், வெங்கதிர் தோய்பொழில் சூழ்மிழலை விண்
ணிழி கோயில் விரும்பியதே. (6)

காமென ரிப்பிழம் பாகநோக்கிக் காம்பன தோளியொ டுங்கல
ந்து, பூமரு நான்முகன் போல்வரேத்தப் புகலி நிலாவிய புண்ணி
யனே, ஈமவ னத்தெரி யாட்டுகந்த வெம்பெரு மானிது வென்கொல்
சொல்லாய், வீமரு தண்பொழில் சூழ்மிழலை விண்ணிழி கோயில்
விரும்பியதே. (7)

இலங்கையர் வேந்தெழில் வாய்த்ததிண்டோ ளிற்றல றவ்விர
லொற்றியைந்து, புலங்களைக் கட்டவர் போற்றவந்தண் புகலி நிலா
விய புண்ணியனே, இலங்கெரி யேந்திநின் றெல்லியாடு மெம்மிறை
யேயிது வென்கொல்சொல்லாய், விலங்கலொண் மாளிகை சூழ்
மிழலை விண்ணிழி கோயில் விரும்பியதே. (8)

செறிமுள ரித்தவி சேறியாறுஞ் செற்றதில் வீற்றிருந் தானு
மற்றைப், பொறியா வத்தணை யானுங்காணப் புகலி நிலாவிய புண்
ணியனே, எறிமழு வோடிள மான்கையின்றி யிருந்தபி ரானிது
வென்கொல்சொல்லாய், வெறிகமழ் பூம்பொழில் சூழ்மிழலை விண்
ணிழி கோயில் விரும்பியதே. (9)

பத்தர்க ணம்பணிந் தேத்தவாய்த்த பான்மைய தன்றியும் பல்
சமணும், புத்தரு நின்றலர் தூற்றவந்தண் புகலி நிலாவிய புண்ணி
யனே, எந்தவத் தோர்க்குமி லக்காய்நின்ற வெம்பெரு மானிது
வென்கொல்சொல்லாய், வித்தகர் வாழ்பொழில் சூழ்மிழலை விண்
ணிழி கோயில் விரும்பியதே. (10)

விண்ணிழி கோயில் விரும்பிமேவும் வித்தக மென்கொ லிதெ
ன்றுசொல்லிப், புண்ணிய னைப்புக லிந்நிலாவு பூங்கொடி யோடிருந்
தானைப்போற்றி, நண்ணிய கீர்த்தி நலங்கொள்கேள்வி நான்மறை

ஞானசம் பந்தன்சொன்ன, பண்ணியல் பாடல்வல் லார்களிந்தப் பாரொடு விண்பரி பாலகரே. (11)

திருச்சிற்றம்பலம்

குறிப்பு:—ஸ்ரீபகலியும்-திருவீழிமிழலையும்.

இவ் விரண்டும் சோழநாட்டி லுள்ளவை. புகலி என்பது சீகாழிக் கொரு பெயர்.

வீழிமிழலையில் சுவாமி:—வீழிபழகர்.

தேவியார்:—சுந்தரகுசாம்பிகை.

---

## பதிகம் 5. கீழைத்திருக்காட்டுப்பள்ளி

### பண்-நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

செய்யரு கேபுனல் பாயவோங்கிச் செங்கயல் பாயச் சில மலர்த்தேன், கையரு கேகனி வாழையீன்று கானலெல் லாங்கமழ் காட்டுப்பள்ளிப், பையரு கேயழல் வாயவைவாய்ப் பாம்பணை யான்பணைத் தோளிபாகம், மெய்யரு கேயுடை யானையுள்கி விண் டவ ரேறுவர்மேலுலகே. (1)

திரைகளெல் லாமல ருஞ்சுமந்து செழுமணி முத்தொடு பொன் வரன்றிக், கரைகளெல் லாமணி சேர்ந்துரிஞ்சிக் காவிரி கால்பொரு காட்டுப்பள்ளி, உரைகளெல் லாமுணர் வெய்திநல்ல வுத்தம ராயுயர்ந் தாருலகில், அரவமெல் லாமரை யார்த்தசெல்வர்க் காட்செய வல்ல லறுக்கலாமே. (3)

தோலுடை யான்வண் ணப் போர்வையினான் சுண்ண வெண் ணீறு துதைந்திலங்கு, நாலுடை யானிமை யோர்பெருமா னுண் ணறி வால்வழி பாடுசெய்யுங், காலுடை யான்கரி தாயகண்டன் காதலிக் கப்படுங் காட்டுப்பள்ளி, மேலுடை யானிமை யாதமுக் கண் மின்னிடை யாளொடும் வேண்டினனே. (4)

சலசல சந்தகி லோடுமுந்திச் சந்தன மேகரை சார்த்திபெங் கும், பலபல வாய்த்தலே 'யார்த்துமண்டிப் பாய்ந்திழி காவிரிப் பாங் கரின்வாய்க், கலகல நின்றதி ருங்கழலான் காதலிக் கப்படுங் காட் டுப்பள்ளிச், சொலவல தொண்டர்க ளேத்தநின்ற சூலம்வல் லான் கழல் சொல்லுவோமே. (5)

தலையவிழ் தண்ணிற நீலநெய்தல் தாமரை செங்கழு நீருமெல் லாங், கலையவி ழுங்குழ லார்கடியக் காதலிக் கப்படுங் காட்டுப்பள் ளித், துலைபயி லுங்குழ லியாழ்முரலத் துன்னிய வின்னிசை யாற்று தைந்த, அலைபயில் பாம்பரை யார்த்தசெல்வர்க் காட்செய வல்ல லறுக்கலாமே. (6)

முடிகையி னற்றொடு மோட்டுழவர் முன்கைத் தருக்கைக் கரும் பின்கட்டிக், கடிகையி னாலெறி காட்டுப்பள்ளி காதல்செய் தான்கரி தாயகண்டன், பொடியணி மேனியி னானையுள்கிப் போதொடு நீர் சுமந் தேத்தி முன்னின், றடிகையி னாற்றொழ வல்லதொண்ட ரருவினை யைத்துரந் தாட்செய்வாரே. (7)

பிறையுடை யான்பெரி யோர்கள்பெம்மான் பெய்கழ னாடொ றும் பேணியேத்த, மறையுடை யான்மழு வாளுடையான் வார்தரு மால்கட னஞ்சமுண்ட, கறையுடை யான்கன லாடுகண்ணாற் காம னைக் காய்ந்தவன் காட்டுப்பள்ளிக், குறையுடை யான்குறட் பூதச் செல்வன் குரைகழ லேகைகள் கூப்பினோமே. (8)

செற்றவர் தம்மர ணம்மவற்றைச் செவ்வழல் வாயெரி யூட்டி நின்றுங், கற்றவர் தாந்தொழு தேத்தநின்றான் காதலிக் கப்படுங் காட்டுப்பள்ளி, உற்றவர் தாமுணர் வெய்திநல்ல வும்பருள் ளார் தொழு தேத்தநின்ற, பெற்றம ரும்பெரு மானையல்லாற் பேசுவது மற்றோர் பேச்சிலோமே. (9)

ஒண்டுவ ரார்துகி லாடைமெய்போர்த் துச்சிகொ ளாமையுண் டேயுரைக்குங், குண்டர்க ளோடரைக் கூறையில்லார் கூறுவ தாங் குண மல்லகண்டீர், அண்டம றையவன் மாலுங்காணா வாதியி னானு றை காட்டுப்பள்ளி, வண்டம ரும்மலர்க் கொன்றைமாலை வார்சடை யான்கழல் வாழ்த்துவோமே. (10)

பொன்னியல் தாமரை நீலநெய்தல் போதுக ளாற்பொலி வெய்து பொய்கைக், கன்னியர் தாங்குடை காட்டுப்பள்ளிக் காதல னைக்கடற் காழியர்கோன், றுன்னிய வின்னிசை யாற்றுதைந்து சொல்லிய ஞானசம் பந்தனல்ல, தன்னிசை யாற்சொன்ன மாலை பத்துந் தாங்கவல் லார்புகழ் தாங்குவாரே. (11)

திருச்சிற்றம்பலம்.

குறிப்பு:—கீழைத்திருக்காட்டுப்பள்ளி.

இத்திருப்பதிகத்தில் இரண்டாவது பாசுரம் மறைந்துபோயிற்று.

இது, தஞ்சைக்கு மேற்கேயும் காவிரிக்குத் தெற்கிலும் உள்ள திருக் காட்டுப்பள்ளியை உத்தேசித்து எழுந்ததலம், இந்திரனால் பூசிக்கப்பெற்றது. சோழநாட்டில் மாயூரத்திற்கு அருகாமையிலுள்ள திருவெண்காட்டுக்கு மேற்கே ஒரு மைலில் உள்ளது.

சுவாமி:—ஆரணியசுந்தரர்
தேவியார்:—அகிலாண்டநாயகி

---

## பதிகம் 6. திருமருகலும்-திருச்செங்காட்டங்குடியும்.

வி னு வு ரை

பண்-நட்டபாடை

---

திருச்சிற்றம்பலம்

அங்கமும் வேதமு மோதுநாவ ரந்தணர் நாளு மடிபரவ, மங் குன் மதிதவழ் மாடவீதி மருக னிலாவிய மைந்தசொல்லாய், செங் கய லார்புனற் செல்வமல்கு சீர்கொள்செங் காட்டங் குடியதனுள், கங்குல் விளங்கெரி யேந்தியாடுங் கணபதி யீச்சரங் காமுறவே. (1)

நெய்தவழ் மூவெரி காவலோம்பு நேர்புரி நூன்மறை யாள ரேத்த, மைதவழ் மாட மலிந்தவீதி மருக னிலாவிய மைந்தசொல்

லாய், செய்தவ நான்மறை யோர்களேத்துஞ் சீர்கொள்செங் காட்டங் குடியதனுள், கைதவழ் கூரெரி யேந்தியாடுங் கணபதி யீச் சரங் காமுறவே. (2)

தோலொடு நூலிழை சேர்ந்தமார்பர் தொகுமறை யோர்கள் வளர்த்தசெந்தீ; மால்புகை போய்விம்மு மாடவீதி மருக னிலாவிய மைந்த சொல்லாய், சேல்புல்கு தண்வயற் சோலைசூழ்ந்த சீர்கொள் செங் காட்டங் குடியதனுள், கால்புல்கு பைங்கழ லார்க்கவாடுங் கணபதி யீச்சரங் காமுறவே. (3)

நாமரு கேள்வியர் வேள்வியோவா நான்மறை யோர்வழி பாடு செய்ய, மாமரு வும்மணிக் கோயின்மேய மருக னிலாவிய மைந்த சொல்லாய், தேமரு பூம்பொழிற் சோலைசூழ்ந்த சீர்கொள்செங் காட்டங் குடியதனுள், காமரு சீர்மகிழ்ந் தெல்லியாடுங் கணபதி யீச்சரங் காமுறவே. (4)

பாடன் முழவும் விழவுமோவாப் பன்மறை யோரவர் தாம் பரவ, மாட நெடுங்கொடி விண்டடவு மருக னிலாவிய மைந்தசொல் லாய், சேடக மாமலர்ச் சோலைசூழ்ந்த சீர்கொள்செங் காட்டங் குடியதனுள், காடக மேயிட மாகவாடுங் கணபதி யீச்சரங் காமு றவே. (5)

புனையழ லோம்புகை யந்தணாளர் பொன்னடி நாடொறும் போற்றிசைப்ப, மனைகெழு மாட மலிந்தவீதி மருக னிலாவிய மைந்தசொல்லாய், சினைகெழு தண்வயற் சோலைசூழ்ந்த சீர்கொள் செங் காட்டங் குடியதனுள், கனைவளர் கூரெரி யேந்தியாடுங் கண பதியீச்சரங் காமுறவே. (6)

பூண்டங்கு மார்பி னிலங்கைவேந்தன் பொன்னெடுந் தோள் வரை யாலடர்த்து, மாண்டங்கு நூன்மறை யோர்பரவ மருக னிலா விய மைந்தசொல்லாய், சேண்டங்கு மாமலர்ச் சோலைசூழ்ந்த சீர் கொள்செங் காட்டங் குடியதனுள், காண்டங்கு தோள்பெயர்த் தெல்லியாடுங் கணபதி யீச்சரங் காமுறவே. (8)

அந்தமு மாதியுந் நான்முகனு மரவணை யானு மறிவரிய, மந்திர வேதங்க ளோதுநாவர் மருக னிலாவிய மைந்தசொல்லாய், செந்தமி ழோர்கள் பரவியேத்துஞ் சீர்கொள்செங் காட்டங் குடியதனுள், கந்தம கிற்புகை யேகமழுங் கணபதி யீச்சரங் காமுறவே. (9)

இலைமரு தேயழ காகநாளு மிடுதுவர்க் காயொடு சுக்குத்தின் னும், நிலையமண் டேரரை நீங்கிநின்று நீதரல் லார்தொழு மாமரு கல், மலைமக டோள்புணர் வாயருளாய் மாசில்செங் காட்டங் குடி யதனுள், கலைமல்கு தோலுடுத் தெல்லியாடுங் கணபதி யீச்சரங் காமுறவே. (10)

நாலுங் குலைக்கமு கோங்குகாழி ஞானசம் பந்த னலந்திகழும், மாலின் மதிதவழ் மாடமோங்கு மருகலின் மற்றதன் மேன்மொழிந்த, சேலுங் கயலுந் திளைத்தகண்ணார் சீர்கொள்செங் காட்டங் குடி யதனுள், சூலம்வல் லான்கழ லேத்துபாடல் சொல்லவல் லார்வினை யில்லையாமே. (11)

திருச்சிற்றம்பலம்

குறிப்பு:—திருமருகலும்-திருச்செங்காட்டங்குடியும்

இத்திருப்பதிகத்தில் ஏழாவது செய்யுள் மறைந்து போயிற்று. திருஞான சம்பந்த சுவாமிகளுக்குத் திருச்செங்காட்டங்குடியில் எழுந்தருளிய திருக் கோலத்தைச் சிவபெருமான் திருமருகல் கோயிலில் காட்டியருளினார். அது காலை எழுந்தது இத்திருவாக்கு.

திருமருகலில் சுவாமி:—மாணிக்கவண்ணர்
தேவியார்:—வண்டுவார்குழலி
திருச்செங்காட்டங்குடியில் சுவாமி:—கணபதீசுரர்
தேவியார்:—திருக்குழல்நாயகி

## பதிகம் 7. திருநள்ளாறுந்-திருஆலவாயும்.

வினவுரை

பண்-நட்டபாடை

---

திருச்சிற்றம்பலம்

பாடக மெல்லடிப் பாவையோடும் படுபிணக் காடிடம் பற்றி
நின்று, நாடக மாடுநள் ளாறுடைய நம்பெரு மானிது வென்கொல்
சொல்லாய், சூடக முன்கை மடந்தைமார்க டுணைவ ரொடுந்தொழு
தேத்திவாழ்த்த, ஆடக மாடநெ ருங்குகூட லாலவா யின்க ணமர்ந்த
வாறே. (1)

திங்களம் போதுஞ் செழும்புனலுஞ் செஞ்சடை மாட்டயல்
வைத்துகந்து, நங்கண் மகிழுநள் ளாறுடைய நம்பெரு மானிது
வென்கொல்சொல்லாய், பொங்கிள மென்முலை யார்களோடும் புன
மயி லாட நிலாமுளைக்கும், அங்கழ கச்சுதை மாடக்கூட லாலவா
யின்க ணமர்ந்தவாறே. (2)

தண்ணறு மத்தமுங் கூவிளமும் வெண்டலை மாலையுந் தாங்கி
யார்க்கும், நண்ணல ரியநள் ளாறுடைய நம்பெரு மானிது வென்
கொல்சொல்லாய், புண்ணிய வாணரும் மாதவரும் புகுந்துட
னேத்தப் புனையிழையார், அண்ணலின் பாட லெடுக்குங்கூட
லாலவா யின்க ணமர்ந்தவாறே. (3)

பூவினில் வாசம் புனலிற்பொற்புப் புதுவிரைச் சாந்தினி னாற்
றத்தோடு, நாவினிற் பாடநள் ளாறுடைய நம்பெரு மானிது வென்
கொல்சொல்லாய், தேவர்க டானவர் சித்தர்விச்சா தரர்கணத்
தோடுஞ் சிறந்துபொங்கி, ஆவினி லைந்துகந் தாட்டுங்கூட லாலவா
யின்க ணமர்ந்தவாறே. (4)

செம்பொன்செய் மாலையும் வாசிகையுந் திருந்துபுகை யுமவியும்
பாட்டும், நம்பும் பெருமைநள் ளாறுடைய நம்பெரு மானிது வென்
கொல்சொல்லாய், உம்பரு நாகரு லகந்தா னுமொலிகடல் சூழ்ந்த

வுலகத்தோரும், அம்புத நால்களா னீடுங்கூட லாலவா யின்க ணமர்ந்த வாறே. (5)

பாகமுந் தேவியை வைத்துக்கொண்டு பைவிரி துத்திப் பரிய பேழ்வாய், நாகமும் பூண்டநள் ளாறுடைய நம்பெரு மானிது வென்கொல்சொல்லாய், போகமு நின்னை மனத்துவைத்துப் புண் ணியர் நண்ணும் புணர்வுபூண்ட, ஆகமு டையவர் சேருங்கூட லாலவா யின்க ணமர்ந்தவாறே. (6)

கோவண வாடையு நீறுப்பூச்சுங் கொடுமழு வேந்தலுஞ் செஞ் சடையும், நாவணப் பாட்டுநள் ளாறுடைய நம்பெரு மானிது வென்கொல்சொல்லாய், பூவண மேனி யிளையமாதர் பொன்னும் மணியுங் கொழித்தெடுத்து, ஆவண வீதியி லாடுங்கூட லாலவா யின்க ணமர்ந்தவாறே. (7)

இலங்கை யிராவணன் வெற்பெடுக்க வெழில்விர லூன்றி யிசை விரும்பி, நலங்கொளச் சேர்ந்தநள் ளாறுடைய நம்பெரு மானிது வென்கொல்சொல்லாய், புலன்களைச் செற்றுப் பொறியைநீக்கிப் புந்தியி லுந்நினைச் சிந்தைசெய்யும், அலங்க னல்லார்க ளமருங்கூட லாலவா யின்க ணமர்ந்தவாறே. (8)

பணியுடை மாலும் மலரினோனும் பன்றியும் வென்றிப் பறவை யாயும், நணுகல ரியநள் ளாறுடைய நம்பெருமானிது வென்கொல் சொல்லாய், மணியொலி சங்கொலி யோடுமற்றை மாமுர சின் னொலி யென்றுமோவா, தணிகிளர் வேந்தர் புகுதுங்கூட லாலவா யின்க ணமர்ந்தவாறே. (9)

தடுக்குடைக் கையருஞ் சாக்கியருஞ் சாதியி னீங்கிய வத்த வத்தர், நடுக்குற நின்றநள் ளாறுடைய நம்பெரு மானிது வென் கொல்சொல்லாய், எடுக்கும் விழவுந் நன்னாள்விழவு மிரும்பலி யின் பினோ டெத்திசையும், அடுக்கும் பெருமைசேர் மாடக்கூட லாலவா யின்க ணமர்ந்தவாறே. (10)

அன்புடை யானை யரனைக்கூட லாலவாய் மேவிய தென்கொ லென்று, நன்பொனை நாதனை நள்ளாற்றானை நயம்பெறப் போற்றி

நலங்குலாவும்,பொன்புடை சூழ்தரு மாடக்காழிப் பூசுரன் ஞானசம் பந்தன்சொன்ன, இன்புடைப் பாடல்கள் பத்தும்வல்லா ரிமை யவ ரேத்த விருப்பர்தாமே. (11)

திருச்சிற்றம்பலம்

குறிப்பு:—திருநள்ளாறு.

நளன் தன்னைப் பற்றிய சனி நீங்கப் பூசித்துப் பேறுபெற்றதால் இப்பெயர் எய்தியது; நளன்பேரில் திருப்பணியும் திருவிழாவும் உடையது. முசுகுந்த சக்கரவர்த்திப் பிரதிஷ்டைசெய்த சப்தஸ்தலங்களுள் இதுவு மொன்று. இத்தலத்தில் திருஞானசம்பந்தசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய "போகமார்த்த பூண்முலையாள்" என்னுந் திருப்பதிகம் பின்பு மதுரையில் சமணர்கள் முன்னிலையில் அக்னியில் இடப்பட்டு பச்சையாய் விளங்கிச் சிவ பெருமானே மெய்ப்பொருள் என்பதை நிறுவியது.

சுவாமி:—தர்ப்பாரணியேச்சுவரர்
தேவியார்:—போகமார்த்த பூண்முலையம்மை
தியாகர்:—நகவிடங்கத் தியாகர்—நடனம்:—உன்மத்த நடனம்
விருக்ஷம்:—தர்ப்பை

இத்தலம் பேரளம் காரைக்கால் இருப்புப் பாதையில் ஒரு ஸ்டேஷன்

## பதிகம் 8. திருஆவூர்ப்பசுபதீச்சரம்

பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

புண்ணியர் பூதியர் பூதநாதர் புடைபடு வார்தம் மனத்தார் திங்கட், கண்ணிய ரென்றென்று காதலாளர் கைதொழு தேத்த விருந்தவூராம், விண்ணுயர் மாளிகை மாடவீதி விரைகமழ் சோலை சுலாவியெங்கும், பண்ணியல் பாடல றாதவாவூர்ப் பசுபதி யீச்சரம் பாடுநாவே. (1)

முத்தியர் மூப்பில ராப்பினுள்ளார் முக்கணர் தக்கன்றன் வேள்விசாடும், அத்திய ரென்றென் றடியரேத்து மையன ணங்கொடிருந்தவூராம், தொத்திய லும்பொழில் மாடுவண்டு துனைதங்தெங்குந் தூமதுப் பாயக்கோயிற், பத்திமைப் பாடல ருதவாவூர்ப் பசுபதியீச்சரம் பாடுநாவே. (2)

பொங்கி வரும்புனல் சென்னிவைத்தாற் போம்வழி வந்திழிவேற்றமானர், இங்குயர் ஞானத்தர் வானோரேத்து மிறையவ ரென்றுமி ருந்தவூராம், தெங்குயர் சோலைசே ராலைசாலி திளைக்கும் விளைவயல் சேரும்பொய்கைப், பங்கய மங்கை விரும்புமாவூர்ப் பசுபதியீச்சரம் பாடுநாவே. (3)

தேவியோர் கூறின ரேறதேறுஞ் செலவினர் நல்குர வென்னைநீக்கும், ஆவிய ரந்தண ரல்லல்தீர்க்கு மப்பனு ரங்கே யமர்ந்தவூராம், பூவிய லும்பொழில் வாசம்வீசப் புரிகுழ லார்சுவ டொற்றிமுற்றப், பாவியல் பாடல ருதவாவூர்ப் பசுபதி யீக்சரம் பாடுநாவே. (4)

இந்தணை யுஞ்சடை யார்விடையா ரிப்பிறப் பென்னை யறுக்கவல்லார், வந்தணைந் தின்னிசை பாடுவார்பான் மன்னினர் மன்னியிருந்தவூராம், கொந்தணை யுங்குழ லார்விழவிற் கூட்ட மிடையிடை சேரும்வீதிப், பந்தணை யும்விர லார்தமாவூர்ப் பசுபதி யீச்சுரம் பாடுநாவே. (5)

குற்ற மறுத்தார் குணத்திலுள்ளார் கும்பிடு வார்தமக் கன்புசெய்வார், ஒற்றை விடையினர் நெற்றிக்கண்ணு ருறைபதி யாகுஞ் செறிகொண்மாடம்,சுற்றிய வாசலின் மாதர்விழாச் சொற்கவி பாடநிதானநல்கப், பற்றிய கையினர் வாழுமாவூர்ப் பசுபதி யீச்சுரம் பாடுநாவே. (6)

நீறுடை யார்நெடு மால்வணங்கு நிமிர்சடை யார்நினை வார்தமுள்ளம், கூறுடை யாருடை கோவணத்தார் குவலய மேத்தவிருந்த வூராம், தாறுடை வாழையிற் கூழைமந்தி தருகனி யுண்டுமிண்டிட்டினத்தைப், பாறிடப் பாய்ந்துப யிலுமாவூர்ப் பசுபதி யீச்சரம் பாடுநாவே. (7)

வெண்டலை மாலை விரவிப்பூண்ட மெய்யுடை யார்விற லாரரக்கன், வண்டமர் பூமுடி செற்றுகந்த மைந்தரி டம்வள மோங்கியெங்கும், கண்டவர் சிந்தைக் கருத்தின்மிக்கார் கதியரு ளென்றுகை யாரக்கூப்பிப், பண்டலர் கொண்டு பயிலுமாவூர்ப் பசுபதி யீச்சரம் பாடுநாவே. (8)

மாலு மயனும் வணங்கிநேட மற்றவ ருக்கெரி யாகிநீண்ட, சீல மறிவரி தாகிநின்ற செம்மையி னாரவர் சேருமூராம், கோல விழாவி னரங்கத்தேறிக் கொடியிடை மாதர்கண் மைந்தரோடும், பாலென வேமொழிந் தேத்துமாவூர்ப் பசுபதி யீச்சரம் பாடு நாவே. (9)

பின்னிய தாழ்சடை யார்பிதற்றும் பேதைய ராஞ்சமண் சாக்கியர்கள், தன்னிய லும்முரை கொள்ளகில்லாச் சைவ ரிடந்தள வேறுசோலைத், துன்னிய மாதரு மைந்தர் தாமுஞ் சுனையிடை மூழ்கித் தொடர்ந்தசிந்தைப், பன்னிய பாடல் பயிலுமாவூர்ப் பசுபதி யீச்சரம் பாடுநாவே. (10)

எண்டிசை யாரும்வ ணங்கியேத்து மெம்பெரு மானையெ ழில்கொளாவூர்ப், பண்டுரி யார்சிலர் தொண்டர்போற்றும் பசுபதி யீச்சரத் தாதிதன்மேல், கண்டல்கண் மிண்டியகானற்காழிக் கவுணியன் ஞானசம் பந்தன்சொன்ன, கொண்டினி தாவிசை பாடியாடிக் கூடுமவருடை யார்கள்வானே. (11)

திருச்சிற்றம்பலம்.

குறிப்பு:—திருஆவூர்ப் பசுபதீச்சுரம்.

ஆவூர் தலத்தையும் பசுபதீச்சுரம் திருக்கோயிலையும் குறிக்கும். பசுக்கள் பூசித்துப் பேறுபெற்றமையால் இத்தலத்திற்கு இப்பெயர் வழங்குவதாயிற்று.

பாபநாசம் என்னும் ஸ்டேஷனிலிருந்து சாலியமங்கலம் திருக்கருகாவூரின் மூலமாகச் சுமார் 5 மைல் உள்ளது. இத்தலத்துக்குத் தாரேச்சுரத்தினின்றும் செல்லலாம்.

சுவாமி:—பசுபதீச்சுரர்

தேவியார்:—மங்கள நாயகியார்.

## பதிகம் 9. திருவேணுபுரம்

பண்-நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

வண்டார்குழ லரிவையொடு பிரியாவகை பாகம்
பெண்டான்மிக வானன்பிறைச் சென்னிப்பெரு மானூர்
தண்டாமரை மலராளுறை தவளந்நெடு மாடம்
விண்டாங்குவ போலும்மிகு வேணுபுர மதுவே. (I)

படைப்புந்நிலை யிறுதிப்பயன் பருமையொடு நேர்மை
கிடைப்பல் கணமுடையான்கிரி பூதப்படை யானூர்
புடைப்பாளையின் கமுகின்னொடு புன்னைமலர் நாற்றம்
விடைத்தேவரு தென்றன்மிகு வேணுபுர மதுவே. (2)

கடந்தாங்கிய கரியையவர் வெருவவுரி போர்த்துப்
படந்தாங்கிய வரவக்குழைப் பரமேட்டிதன் பழவூர்
நடந்தாங்கிய நடையார்நல பவளத்துவர் வாய்மேல்
விடந்தாங்கிய கண்ணார்பயில் வேணுபுர மதுவே. (3)

தக்கன்றன சிரமொன்றினை யரிவித்தவன் றனக்கு
மிக்கவ்வர மருள்செய்தவெம் விண்ணோர்பெரு மானூர்
பக்கம்பல மயிலாடிட மேகம்முழ வதிர
மிக்கம்மது வண்டார்பொழில் வேணுபுர மதுவே. (4)

நானாவித வுருவானமை யாள்வானணு காதார்
வானார்திரி புரமூன்றெரி யுண்ணச்சிலை தொட்டான்
றேனார்ந்தெழு கதலிக்கனி யுண்பான்றிகழ் மந்தி
மேனோக்கிநின் றிரங்கும்பொழில் வேணுபுர மதுவே. (5)

மண்ணோர்களும் விண்ணோர்களும் வெருவிம்மிக வஞ்சக்
கண்ணார்சல மூடிக்கட லோங்கவ்வுயர்ந் தானூர்
தண்ணார்நறுங் கமலம்மலர் சாயவ்விள வாளை
விண்ணோர்துதி கொள்ளும்வியன் வேணுபுர மதுவே. (6-7)

மலையான்மக ளஞ்சவ்வரை யெடுத்தவ்வலி யரக்கன்
தலைதோளவை நெரியச்சர ணுகிர்வைத்தவன் றன்னூர்
கலையாறொடு சுருதித்தொகை கற்றோர்மிகு கூட்டம்
விலையாயின சொற்றேர்தரு வேணுபுர மதுவே. (8)

வயமுண்டவ மாலும்மடி காணாதல மாக்கும்
பயனாகிய பிரமன்படு தலையேந்திய பரனூர்
கயமேவிய சங்கந்தரு கழிவிட்டுயர் செந்நெல்
வியன்மேவிவந் துறங்கும்பொழில் வேணுபுர மதுவே. (9)

மாசேறிய வுடலாரமண் கழுக்கள்ளொடு தேரர்
தேசேறிய பாதம்வணங் காமைத்தெரி யானூர்
தூசேறிய வல்குற்றுடி யிடையார்துணை முலையார்
வீசேறிய புருவத்தவர் வேணுபுர மதுவே. (10)

வேதத்தொலி யானும்மிகு வேணுபுரந் தன்னைப்
பாதத்தினின் மனம்வைத்தெழு பந்தன்றன பாடல்
ஏதத்தினை யில்லாவிவை பத்தும்மிசை வல்லார்
கேதத்தினை யில்லார்சிவ கெதியைப்பெறு வாரே. (11)

திருச்சிற்றம்பலம்.

வேணுபுரம் என்பது சீகாழி. இத்திருப்பதிகத்தில் ஏழாவது பாட்டு மறைவுற்றது.

---

## பதிகம் 10. திரு அண்ணாமலை

பண்-நட்டபாடை

---

திருச்சிற்றம்பலம்

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரண் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே. (1)

தேமாங்கனி கடுவன்கொள விடுகொம்பொடு தீண்டித்
தூமாமழை துறுவன்மிசை சிறுநுண்டுளி சிதற
ஆமாம்பிணை யணையும்பொழி லண்ணாமலை யண்ணல்
பூமாங்கழல் புனைசேவடி நினைவார்வினை யிலரே. (2)

பீலிம்மயில் பெடையோடுறை பொழில்சூழ்கழை முத்தம்
சூலிம்மணி தரைமேனிறை சொரியும்விரி சாரல்
ஆலிம்மழை தவழும்பொழி லண்ணாமலை யண்ணல்
காலன்வலி தொலைசேவடி தொழுவாரன புகழே. (3)

உதிரும்மயி ரிடுவெண்டலை கலனாவுல கெல்லாம்
எதிரும்பலி யுணலாகவு மெருதேறுவ தல்லால்
முதிருஞ்சடை யிளவெண்பிறை முடிமேல்கொள வடிமேல்
அதிருங் கழலடிகட்கிட மண்ணாமலை யதுவே. (4)

மரவஞ்சிலை தரளம்மிகு மணியுந்துவெள் ளருவி
அரவஞ்செய முரவம்படு மண்ணாமலை யண்ணல்
உரவஞ்சடை யுலவும்புன லுடனாவது மோரார்
குரவங்கமழ் நறுமென்குழ லுமைபுல்குதல் குணமே. (5)

பெருகும்புன லண்ணாமலை பிறைசேர்கட னஞ்சைப்
பருகுந்தனை துணிவார்பொடி யணிவாரது பருகிக்
கருகும்மிட றுடையார்கமழ் சடையார்கழல் பரவி
உருகும்மன முடையார்தமக் குறுநோயடை யாவே. (6)

கரிகாலன குடர்கொள்வன கழுகாடிய காட்டில்
நரியாடிய நகுவெண்டலை யுதைபுண்டவை யுருள
எரியாடிய விறைவர்க்கிட மினவண்டிசை முரல
அரியாடிய கண்ணாளொடு மண்ணாமலை யதுவே. (7)

ஒளிறூபுலி யதளாடைய னுமையஞ்சுதல் பொருட்டால்
பிளிறூகுரன் மதவாரண வதனம்பிடித் துரித்து
வெளிறூபட விளையாடிய விகிர்தன்னிரா வணனை
அளறூபட வடர்த்தானிட மண்ணாமலை யதுவே. (8)

விளவார்கனி படநூறிய கடல்வண்ணனும் வேதக்
கிளர்தாமரை மலர்மேலுறை கேடில்புக ழோனும்
அள்வாவண மழலாகிய வண்ணாமலை யண்ணல்
தளராமுலை முறுவல்லுமை தலைவன்னடி சரணே. (9)

வேர்வந்துற மாசூர்தர வெயில்நின்றுழல் வாரும்
மார்பம்புதை மலிசீவர மறையாவரு வாரும்
ஆரம்பர்த முறைகொள்ளன்மி னண்ணாமலை யண்ணல்
கூர்வெண்மழுப் படையானல்ல கழல்சேர்வது குணமே. (10)

வெம்புந்திய கதிரோனொளி விலகும்விரி சாரல்
அம்புந்திமூ வெயிலெய்தவ னண்ணாமலை யதனைக்
கொம்புந்துவ குயிலாலுவ குளிர்காழியுள் ஞான
சம்பந்தன தமிழ்வல்லவ ரடிபேணுதல் தவமே. (11)

திருச்சிற்றம்பலம்

குறிப்பு;—திருவண்ணாமலை.

இது அருணாசலம் என்று தற்போது வழங்கப்பெறும். முன் ஒருகால் பிரம்மாவும் விஷ்ணுவும் தாமே பெரியவர்களென்று தருக்கித்து நின்ற பொழுது சிவபெருமான் இவர்கள் முன்னிலையில் அக்னி ஸ்தம்பமாகத் தோன்று நின்றுத் தமது அடியையேனும் முடியையேனும் யார் தேடி யறிகின்றனரோ அவரே பெரியர் என்று கூறுதலும் பிரம்மா அன்னப் பறவையாக மாறி உயர்ந்து பறந்தும், விஷ்ணு பன்றியாகப் பூமியைக் கிண்டிப் பாதலம் வரைப் புகுந்தும் சிவபெருமானாரின் அடிமுடியைக் காணாது வெருண்டுத் தாம் இருவரும் பெரியரல்லர் என்று கர்வ மொடுங்கியது இத்தலத்தின் புராண வரலாறு. அருணாசலம் என்ற பதத்திற்கு அருணம்:—சிவப்பு அதாவது அக்னி நிறம் பெற்ற மலை யென்றும், அ-ருணம் என்று பிரித்துத் தம்மிடம் வந்து சரண் புகுந்த அடியவர்தம் கர்மத்தை யொழித்துச் சிவ சாயுச்சிய பதவியை யளிக்க வல்லதோர் மலையென்றும் பொருள் உரைப்பர் சிலர். மற்றுஞ் சிலர் “எல்லையில் அருணையை நினைக்க எய்தலாம் முத்தி” என்று கூறப்பட்டிருத்தலான், நினைத்த மாத்திரத்திலேயே முத்தியை யளிக்கவல்லதோர் விசேடம் இம்மலைக்கு உண்டு என்று அறைகுவர். மற்று பஞ்சபூத தலங்களுள் இது அக்னி (தேயு) ஸ்தலம் என்ற பெருமையும் வாய்ந்தது.

சிவபெருமானின் திருக்கண் புதைத்த தேவியார் இத்தலத்தில் அவன் அருளாலே அவன் தாள் வணங்கித் தவமாற்றி வலப்பாகம் எய்தினரென்றும், சிவபெருமானிடம் பேரன்பு கொண்ட வல்லாள மன்னனுக்குச் சிவபெருமானே தாம் ஒரு புத்திரராகத் தோன்றி அவனுக்குப் பெரும் பேறளித்தனர் என்றும், திருப்புகழ் ஆசிரியரான அருணகிரியாரின் திருவவதாரத் தலமென்றும், இவ் வருணகிரியார்க்கு இத்தலத் திருக்கோயிலின் துவஜஸ்தம்பத்துக்கு முன் கட்டப்பட்டுள்ள மண்டப ஸ்தம்பமொன்றில் எழுந்தருளியிராநின்ற ஸ்ரீ முருகக்கடவுள் இசை மிக்கத் திருப்புகழ்ப் பாட அநுக்கிரகித்தனர் என்றும், குகை நமச்சிவாயர் குரு நமச்சிவாயர் முதலிய பெரிய தவசிரேஷ்டர்கள் ஈண்டு உறைந்து இருந்தவர்களென்றும், அருணசல புராணம் விதந்து உரைக்கும். கார்த்திகை மாதத் திருக் கார்த்திகை தினத்தன்று தீப தரிசனம் செய்துப் பேறடைவான் வேண்டி இத்தலத்தில் கோடிக் கணக்கான அடியவர்கள் கூடுவார்கள். இத் திருவண்ணமலை நடுநாட்டிலுள்ள ஒரு ரயில் ஸ்டேஷன்.

சுவாமீ:—அருணசலேசுவரர்
தேவியார்:—உண்ணுமுலையம்மை
விருக்ஷம்:—மகிழ்

---

## பதிகம் 11. திருவீழிமிழலை

பண்-நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

சடையார்புன லுடையானொரு சரிகோவண முடையான்
படையார்மழு வுடையான்பல பூதப்படை யுடையான்
மடமான்விழி யுமைமாதிட முடையானெனை யுடையான்
விடையார்கொடி யுடையானிடம் வீழிம் மிழலையே. (1)

ஈறாய்முத லொன்றாயிரு பெண்ணாண்குண மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதம்மவை யைந்தாய்
ஆறார்சுவை யேழோசையொ டெட்டுத்திசை தானாய்
வேறாயுட னானானிடம் வீழிம் மிழலையே. (2)

175266

வம்மின்னடி யீர்நாண்மல ரிட்டுத்தொழு துய்ய
உம்மன்பினொ டெம்மன்புசெய் தீசன்னுறை கோயில்
மும்மென்றிசை முரல்வண்டுகள் கொண்டித்திசை யெங்கும்
விம்மும்பொழில் சூழ்தண்வயல் வீழிம்மிழ லையே. (3)

பண்ணும்பத மேழும்பல வோசைத்தமி ழவையும்
உண்ணின்றதொர் சுவையும்முறு தாளத்தொலி பலவும்
மண்ணும்புன லுயிரும்வரு காற்றுஞ்சுடர் மூன்றும்
விண்ணும்முழு தானானிடம் வீழிம்மிழ லையே. (4)

ஆயாதன சமயம்பல வறியாதவ னெறியின்
தாயானவ னுயிர்கட்குமுன் றலையானவன் மறைமுத்
தீயானவன் சிவனெம்மிறை செல்வத்திரு வாரூர்
மேயானவ னுறையும்மிடம் வீழிம்மிழ லையே. (5)

கல்லானிழற் கீழாயிடர் காவாயென வானோர்
எல்லாமொரு தேராயயன் மறைபூட்டிநின் றுய்ப்ப
வல்லாயெரி காற்றீர்க்கரி கோல்வாசுகி நாண்கல்
வில்லாவெயி லெய்தானிடம் வீழிம்மிழலையே. (6)

O23:4172 N27

கரத்தான்மலி சிரத்தான்கரி யுரித்தாயதொர் படத்தான்
புரத்தார்பொடி படத்தன்னடி பணிமூவர்கட் கோவா
வரத்தான்மிக வளித்தானிடம் வளர்புன்னைமுத் தரும்பி
விரைத்தாதுபொன் மணியீன்றணி வீழிம்மிழ லையே. (7)

முன்னிற்பவ ரில்லாமுர ணரக்கன்வட கயிலை
தன்னைப்பிடித் தெடுத்தான்முடி தடந்தோளிற வூன்றிப்
பின்னைப்பணிந் தேத்தப்பெரு வாள்பேரொடுங் கொடுத்த
மின்னிற்பொலி சடையானிடம் வீழிம்மிழ லையே. (8)

பண்டேமல குண்டானவை கண்டானுமுன் னறியா
ஒண்டீயுரு வானானுறை கோயின்னிறை பொய்கை
வண்டாமரை மலர்மேன்மட வன்னந்நடை பயில
வெண்டாமரை செந்தாதுதிர் வீழிம்மிழ லையே. (9)

மசங்கற்சமண் மண்டைக்கையர் குண்டக்குண மிலிகள்
இசங்கும்பிறப் பறுத்தானிட மிருந்தேன்களித் திரைத்துப்
பசும்பொற்கிளி களிமஞ்ஞைக ளொளிகொண்டெழு பகலோன்
விசும்பைப்பொலி விக்கும்பொழில் வீழிம்மிழ லையே. (10)

வீழிம்மிழ லைம்மேவிய விகிர்தன்றனை விரைசேர்
காழிந்நகர்க் கலைஞானசம் பந்தன்றமிழ் பத்தும்
யாழின்னிசை வல்லார்சொலக் கேட்டாரவ ரெல்லாம்
ஊழின்மலி வினைபோயிட வுயர்வானடை வாரே. (11)

திருச்சிற்றம்பலம்

குறிப்பு:—திருவீழிமிழலை.

இது விஷ்ணுமூர்த்திச் சிவபெருமானைப் பூசித்துச் சக்கரம் பெற்ற தலம். சிவபெருமான் தற்போது எழுந்தருளி யிராநின்ற விமானம் விஷ்ணுமூர்த்தியால் விண்ணுலகத்தினின்றும் கொண்டுவந்து பிரதிட்டிக்கப் பெற்ற தொன்றாகலான் இந்த விமானத்திற்கு விண்ணிழி விமானம் என்று பெயர். இத்தலத்தில் திருஞான சம்பந்த சுவாமிகளும் திருநாவுக்கரசு சுவாமிகளும் சந்தித்துக் கிழக்குப் பீடத்திலும் மேற்குப் பீடத்திலும் நின்று பாடிப் படிக்காசு பெற்று அடியார்களுக்கு அன்னதானம் செய்வாராயினர். சிவபெருமான் திருஞானசம்பந்த சுவாமிகளுக்குச் சீகாழியில் திருத்தோணியில் வீற்றிருக்கும் திருக்கோலத்தைக் காட்டியருளுதலும் சுவாமிகள் இந்த இரண்டு தல திருப்பதிகங்களையுஞ் சேர்த்து "மைம்மரு பூங்குழல்" என்ற திருப்பதிகத்தைப் பாடி யருளினர். இத்தலம் பூந்தோட்டம் ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே சுமார் 4 மைல் தூரத்தில் உள்ளது.

சுவாமி:—வீழியழகர்
தேவியார்:—சுந்தர குசாம்பிகை
விருக்ஷம்:—வீழி

## பதிகம் 12. திருமுதுகுன்றம்

பண்-நட்டபாடை

---

திருச்சிற்றம்பலம்

மத்தாவரை நிறுவிக்கடல் கடைந்தவ்விட முண்ட
தொத்தார்தரு மணிநீண்முடிச் சுடர்வண்ணன திடமாங்
கொத்தார்மலர் குளிர்சந்தகி லொளிர்குங்குமங் கொண்டு
முத்தாறுவந் தடிவீழ்தரு முதுகுன்றடை வோமே. (1)

தழையார்வட வியவீ தனிற் றவமேபுரி சைவன்
இழையாரிடை மடவாளொடு மினிதாவுறை விடமாம்
மழைவானிடை முழவவ்வெழில் வளைவாளுகி ரெரிகண்
முழைவாளரி குமிறும்முயர் முதுகுன்றடை வோமே. (2)

விளையாததொர் பரிசில்வரு பசுபாசவே தனையொண்
டளையாயின தவிரவ்வருள் தலைவன்னது சார்பாம்
களையார்தரு கதிராயிர முடையவ்வவ னோடு
முளைமாமதி தவழும்முயர் முதுகுன்றடை வோமே. (3)

சுரர்மாதவர் தொகுகின்னர ரவரோதொலை வில்லா
நரரானபன் முனிவர்தொழ விருந்தானிட நலமார்
அரசார்வர வணிபொற்கல னவைகொண்டுபன் னாளும்
முரசார்வரு மணமொய்ம்புடை முதுகுன்றடை வோமே. (4)

அறையார்கழ லந்தன்றனை பயின்மூவிலை யழகார்
கறையார்நெடு வேலின்மிசை யேற்றானிடங் கருதில்
மறையாயின பலசொல்லியொண் மலர்சாந்தவை கொண்டு
முறையான்முகு முனிவர்தொழு முதுகுன்றடை வோமே. (5)

எவார்சிலை யெயினன்னுரு வாகியெழில் விசயற்
கோவாதவின் னருள்செய்தவெம் மொருவற்கிட முலகில்
சாவாதவர் பிறவாதவர் தவமேமிக வுடையார்
மூவாதபன் முனிவர்தொழு முதுகுன்றடை வோமே. (6)

தழல்சேர்தரு திருமேனியர் சசிசேர்சடை முடியர்
மழமால்விடை மிகவேறிய மறையோனுறை கோயில்
விழவோடொலி மிகுமங்கையர் தகுமாடக சாலை
முழவோடிசை நடமுன்செயு முதுகுன்றடை வோமே. (7)

செதுவாய்மைகள் கருதிவ்வரை யெடுத்ததிற லரக்கன்
கதுவாய்கள்பத் தலறியிடக் கண்டானுறை கோயில்
மதுமாயசெங் காந்தண்மலர் நிறையக்குறை வில்லா
முதுவேய்கண்முத் துதிரும்பொழில் முதுகுன்றடை வோமே.

இயலாடிய பிரமன்னரி யிருவர்க்கறி வரிய
செயலாடிய தீயாருரு வாகியெழு செல்வன்
புயலாடுவண் பொழில்சூழ்புனற் படப்பைத்தடத் தருகே
முயலோடவெண் கயல்பாய்தரு முதுகுன்றடை வோமே. (9)

அருகரொடு புத்தரவ ரறியாவரன் மலையான்
மருகன்வரு மிடபக்கொடி யுடையானிட மலரார்
கருகுகுழன் மடவார்கடி குறிஞ்சியது பாடி
முருகன்னது பெருமைபகர் முதுகுன்றடை வோமே. (10)

முகில்சேர்தரு முதுகுன்றுடை யானைம்மிகு தொல்சீர்ப்
புகலிந்நகர் மறைஞானசம் பந்தனுரை செய்த
நிகரில்லன தமிழ்மாலைக ளிசையோடிவை பத்தும்
பகரும்மடி யவர்கட்கிடர் பாவம்மடை யாவே. (11)

திருச்சிற்றம்பலம்

குறிப்பு:— திருமுதுகுன்றம்

சிவபெருமானால் இக்குன்றம் உலகில் முதன்முதலில் படைக்கப்பட்டமையால் முதுகுன்றம் என்ற பெயர் அடைந்து, விருத்தகிரியென்றும் பழமலையென்றும் இது அழைக்கப்பெறும் பொதுவாகத் தற்போது விருத்தாசலம் என்று தெரிந்துகொள்ளப்படும். பிரம்மதேவர் அகஸ்தியர் முதலியவர்கள் பூசித்துப் பேறுபெற்றனர்என்று இத்தலபுராணம் கூறும். இத்தலத்தில் திருமணிமுத்தா நதி பாய்கின்றது. திருமால் முதலிய தேவர்கள்

சிவபெருமானை வழிபடுங்காலத்து அவர்தம் கண்களில் வழிந்த ஆநந்தபாஷ்பம் ஒரு நதியாகப்பிரவாகித்த தென்றும் அது திருமணிமுத்தாநதி யென்று அழைக்கப்பட்ட தென்றும் இத்தல தீர்த்த விசேடமாகும். இத்தலத்தில் வசிப்போர்த் தாம்இறக்குந் தருவாயில் திருமுதுகுன்றப் பெருமானாரின் மந்திர உபதேசம் அடைவாராயின் பிறவிக்களையை நீக்கிக்கொள்ளுவர் என்ற பெரும் மகிமை இத்தலத்திற்குண்டு. எனவே, இறந்தார்க்கு முத்தியை யளிக்கும் பான்மையுடையதாகவின் இதற்கு விருத்தகாசி யென்றும் பெயர். ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவபெருமானைப் பாடிப் பொன் பெற்றுத் திருமணி முத்தாநதியில் இட்டுப் பரவையார் முன்னிலையில் திரு ஆரூர்க் கமலாலயம் என்னும் திருக்குளத்தில் அப்பொன்னை வாரியெடுத்துக் கொண்டனர்.

இத்தலம் சிதம்பரத்திலிருந்து மேற்கே சுமார் 30 மைல் தூரத்திலும் கூடலூரிலிருந்து குறிஞ்சிப்பாடியென்ற ஊரின் மூலமாகச் சென்றால் சுமார் 35 மைல் தூரத்திலும் எழுந்தருளியிருக்கின்றது.

சுவாமி:—பழமலைநாதர்
தேவியார்:—பெரியநாயகியம்மை
தீர்த்தம்:—திருமணிமுத்தாநதி
விருக்ஷம்:—வன்னி

---

## பதிகம் 13. திருவியலூர்

பண் - நட்டபாடை

---

திருச்சிற்றம்பலம்

குரவங்கமழ் நறுமென்குழ லரிவையவள் வெருவப்
பொருவெங்கரி படவென்றத னுரிவையுட லணிவோன்
அரவும்மலை புனலும்மிள மதியுந்நகு தலையும்
விரவுஞ்சடை யடிகட்கிடம் விரிநீர்விய லூரே. (1)

ஏரூர்தரு மொருவன்பல வுருவன்னிலை யானான்
ஆரூர்தரு சடையன்னன லுருவன்புரி வுடையான்
மாரூர்புர மெரியச்சிலை வளைவித்தவன் மடவாள்
வீரூர்தர நின்றானிடம் விரிநீர்விய லூரே. (2)

செம்மென்சடை யவைதாழ்வுற மடவார்மனை தோறும்
பெய்ம்மின்பலி யெனநின்றிசை பகர்வாரவ ரிடமாம்
உம்மென்றெழு மருவித்திரள் வரைபற்றிட வுரைமேல்
விம்மும்பொழில் கெழுவும்வயல் விரிநீர்விய லூரே. (3)

அடைவாகிய வடியார்தொழ வலரோன்றலை யதனில்
மடவாரிடு பலிவந்துண லுடையானவ னிடமாம்
கடையார்தர வகிலார்கழை முத்தந்நிறை சிந்தி
மிடையார்பொழில் புடைசூழ்தரு விரிநீர்விய லூரே. (4)

எண்ணார்தரு பயனாயய னவனாய்மிகு கலையாய்ப்
பண்ணார்தரு மறையாயுயர் பொருளாயிறை யவனாய்க்
கண்ணார்தரு முருவாகிய கடவுள்ளிட மெனலாம்
விண்ணோரொடு மண்ணோர்தொழு விரிநீர்விய லூரே. (5)

வசைவிற்கொடு வருவேடுவ னவனாய்நிலை யறிவான்
திசையுற்றவர் காணச்செரு மலைவானிலை யவனை
அசையப்பொரு தசையாவண மவனுக்குயர் படைகள்
விசையற்கருள் செய்தானிடம் விரிநீர்விய லூரே. (6)

மானார வுடையானிர வுடையான்பக னட்டம்
ஊனார்தரு முயிரானுயர் விசையான்விளை பொருள்கள்
தானாகிய தலைவன்னென நினைவாரவ ரிடமாம்
மேனாடிய விண்ணோர்தொழும் விரிநீர்விய லூரே. (7)

பொருவாரெனக் கெதிராரெனப் பொருப்பையெடுத் தான்றன்
கருமால்வரை கரந்தோளுரங் கதிர்நீண்முடி நெரிந்து
சிரமாயின கதறச்செறி கழல்சேர்திரு வடியின்
விரலாலடர் வித்தானிடம் விரிநீர்விய லூரே. (8)

வளம்பட்டலர் மலர்மேலயன் மாலும்மொரு வகையால்
அளம்பட்டறி வொண்ணாவகை யழலாகிய வண்ணல்
உளம்பட்டெழு தழற்றூணத னடுவேயொரு வுருவம்
விளம்பட்டருள் செய்தானிடம் விரிநீர்விய லூரே. (9)

தடுக்காவுடன் மறைப்பாரவர் தவர்சீவர மூடிப்
பிடக்கேயுரை செய்வாரொடு பேணர்நமர் பெரியோர்
கடற்சேர்தரு விடமுண்டமு தமரர்க்கருள் செய்த
விடைச்சேர்தரு கொடியானிடம் விரிநீர்விய லூரே. (10)

விளங்கும்பிறை சடைமேலுடை விகிர்தன்விய லூரைத்
தளங்கொண்டதொர் புகலித்தகு தமிழ்ஞானசம் பந்தன்
துளங்கில்தமிழ் பரவித்தொழு மடியாரவ ரென்றும்
விளங்கும்புக ழதனோடுயர் விண்ணும்முடை யாரே. (11)

திருச்சிற்றம்பலம்

குறிப்பு:— திருவியலூர்

இத்தலம் கும்பகோணத்துக்கு கிழக்கே 4 மைலிலும் திருவிடைமருதூருக்கு வடமேற்கே 4 மைலிலும் அமையப் பெற்றது.

பண்டாரவாடைத் திருவிசநல்லூர் என்று இது இப்போது அழைக்கப் பெறும்.

சுவாமி:—யோகாநந்தீசுரர்

தேவியார்:—சாந்தநாயகியம்மை

ஈதொரு பதிகமே இதற்குரியது

---

## பதிகம் 14. திருக்கொடுங்குன்றம்

பண்-நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

வானிற்பொலி வெய்தும்மழை மேகங்கிழித் தோடிக்
கூனற்பிறை சேருங்குளிர் சாரற்கொடுங் குன்றம்
ஆனிற்பொலி யைந்தும்மமர்ந் தாடியுல கேத்தத்
தேனிற்பொலி மொழியாளொடு மேயான்றிரு நகரே. (1)

மயில்புல்குதண் பெடையோடுட னாடும்வளர் சாரல்
குயிலின்னிசை பாடுங்குளிர் சோலைக்கொடுங் குன்றம்
அயில்வேன்மலி நெடுவெஞ்சுட ரனலேந்திநின் றாடி
எயின்முன்பட வெய்தானவன் மேயவ்வெழி னகரே. (2)

மிளிரும்மணி பைம்பொன்னொடு விரைமாமல ருந்திக்
குளிரும்புனல் பாயுங்குளிர் சாரற்கொடுங் குன்றம்
கிளர்கங்கையொ டிளவெண்மதி கெழுவுஞ்சடை தன்மேல்
வளர்கொன்றையு மதமத்தமும் வைத்தான்வள நகரே. (3)

பருமாமத கரியோடரி யிரியும்விரி சாரல்
குருமாமணி பொன்னோடிழி யருவிக்கொடுங் குன்றம்
பெருமாவெயில் வரைவிற்றரு கணையிற்பொடி செய்த
பெருமானவ னுமையாளொடு மேவும்பெரு நகரே. (4)

மேகத்திடி குரல்வந்தெழ வெருவிவ்வரை யிழியும்
கூகைக்குல மோடித்திரி சாரற்கொடுங் குன்றம்
நாகத்தொடு மிளவெண்பிறை சூடிந்நல மங்கை
பாகத்தவ னிமையோர்தொழ மேவும்பழ நகரே. (5)

கைம்மாமத கரியின்னின மிடியின்குர லதிரக்
கொய்ம்மாமலர்ச் சோலைபுக மண்டுங்கொடுங் குன்றம்
அம்மானென வுள்கித்தொழு வார்கட்கருள் செய்யும்
பெம்மானவ னிமையோர்தொழ மேவும்பெரு நகரே (6)

மரவத்தொடு மணமாதவி மௌவல்லது விண்ட
குரவத்தொடு விரவும்பொழில் சூழ்தண்கொடுங் குன்றம்
அரவத்தொடு மிளவெண்பிறை விரவும்மலர்க் கொன்றை
நிரவச்சடை முடிமேலுடன் வைத்தானெடு நகரே. (7)

முட்டாமுது கரியின்னின முதுவேய்களை முனிந்து
குட்டாச்சுனை யவைமண்டிநின் ருடுங்கொடுங் குன்றம்
ஒட்டாவரக் கன்றன்முடி யொருபஃதவை யுடனே
பிட்டானவ னுமையாளொடு மேவும்பெரு நகரே. (8)

அறையும்மரி குரலோசையை யஞ்சியடு மானை
குறையும்மன மாகிம்முழை வைகுங்கொடுங் குன்றம்
மறையம்மவை யுடையானென நெடியானென விவர்கள்
இறையும்மறி வொண்ணாதவன் மேயவ்வெழி நகரே. (9)

மத்தக்களி றுளிவ்வா வஞ்சிம்மலை தன்னைக்
குத்திப்பெரு முழைதன்னிடை வைகுங்கொடுங் குன்றம்
புத்தரொடு பொல்லாமனச் சமணர்புறங் கூறப்
பத்தர்க்கருள் செய்தானவன் மேயபழ நகரே. (10)

கூனற்பிறை சடைமேன்மிக வுடையான்கொடுங் குன்றைக்
கானற்கழு மலமாநகர்த் தலைவன்னல கவுணி
ஞானத்துயர் சம்பந்தன நலங்கொள்தமிழ் வல்லார்
ஊனத்தொடு துயர்தீர்ந்துல கேத்தும்மெழி லோரே. (11)

திருச்சிற்றம்பலம்

குறிப்பு:—திருக்கோடுங்குன்றம்

இது ஆளுடைய பிள்ளையாரால் பாடல்பெற்ற தன்றி அருணகிரியாரால் திருப்புகழ்ப்பாடலும் பெற்ற தலம். பொது மக்கள் இதனைப் பிரான் மலை என்று வழங்குவர். ஈண்டு நாகராஜனும் மகோதா இருடியும் பூசித்துப் பேறுபெற்றனர். இத்தலம் அம்மைய நாயக்கனூர் ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே சுமார் 15 மைல் தூரத்தில் உள்ளது. பாண்டி நாட்டுத்தலங்களில் இஃதொன்றும்.

சுவாமி:—கொடுங்குன்றீசர்
தேவியார்:—குயிலமுதநாயகி

---

## பதிகம் 15. திருநெய்த்தானம்

பண் - நட்டபாடை

---

திருச்சிற்றம்பலம்

மையாடிய கண்டன்மலை மகள்பாகம துடையான்
கையாடிய கேடில்கரி யுரிமூடிய வொருவன்
செய்யாடிய குவளைம்மலர் நயனத்தவ ளோடும்
நெய்யாடிய பெருமானிடம் நெய்த்தானமெ னீரே. (1)

பறையும்பழி பாவம்படு துயரம்பல தீரும்
பிறையும்புன லரவும்படு சடையெம்பெரு மானூர்
அறையும்புனல் வருகாவிரி யலைசேர்வட கரைமேல்
நிறையும்புனை மடவார்பயி னெய்த்தானமெ னீரே. (2)

பேயாயின பாடப்பெரு நடமாடிய பெருமான்
வேயாயின தோளிக்கொரு பாகம்மிக வுடையான்
தாயாகிய வுலகங்களை நிலைபேறுசெய் தலைவன்
நேயாடிய பெருமானிட நெய்த்தானமெ னீரே. (3)

சுடுநீறணி யண்ணல்சுடர் சூலம்மன லேந்தி
நடுநள்ளிரு ணடமாடிய நம்பன்னுறை விடமாம்
கடுவாளிள வரவாடுமிழ் கடனஞ்சம துண்டான்
நெடுவாளைகள் குதிகொள்ளுயர் நெய்த்தானமெ னீரே. (4)

நுகராரமொ டேலம்மணி செம்பொன்னுரை யுந்திப்
பகராவரு புனல்காவிரி பரவிப்பணிந் தேத்தும்
நிகரான்மண லிடுதண்கரை நிகழ்வாயநெய்த் தான
நகரானடி யேத்தந்நமை நடலையடை யாவே. (5)

விடையார்கொடி யுடையவ்வணல் வீந்தார்வெளை யெலும்
உடையார்நறு மாலைசடை யுடையாரவர் மேய [பும்
புடையேபுனல் பாயும்வயல் பொழில்சூழ்ந்த நெய்த் தானம்
அடையாதவ ரென்றும்மம ருலகம்மடை யாரே. (6)

நிழலார்வயல் கமழ்சோலைக ணிறைகின்றநெய்த் தானத்
தழலானவ னனலங்கையி லேந்தியழ காய
கழலானடி நாளுங்கழ லாதேவிட லின்றித்
தொழலாரவர் நாளுந்துய ரின்றித்தொழு வாரே. (7)

அறையார்கட லிலங்கைக்கிறை யணிசேர்கயி லாயம்
இறையாரமு னெடுத்தானிரு பதுதோளிற வூன்றி
நிறையார்புன னெய்த்தானனன் னிகழ்சேவடி பரவக்
கரையார்கதி வாளீந்தவர் கழலேத்துதல் கதியே. (8)

கோலம்முடி நெடுமாலொடு கொய்தாமரை யானும்
சீலம்மறி வரிதாயொளி திகழ்வாயநெய்த் தானம்
காலம்பெற மலர்நீரவை தூவித்தொழு தேத்தும்
ஞாலம்புக ழடியாருட லுறுநோய்நலி யாவே. (9)

மத்தம்மலி சித்தத்திறை மதியில்லவர் சமணர்
புத்தரவர் சொன்னம்மொழி பொருளாநினை யேன்மின்
நித்தம்பயி னிமலன்னுறை நெய்த்தானம தேத்தும்
சித்தம்முடை யடியாருடல் செறுநோயடை யாவே. (10)

தலமல்கிய புனற்காழியுட் டமிழ்ஞானசம் பந்தன்
நிலமல்கிய புகழான்மிகு நெய்த்தானனை நிகரில்
பலமல்கிய பாடல்லிவை பத்தும்மிக வல்லார்
சிலமல்கிய செல்வன்னடி சேர்வர்சிவ கதியே. (11)

திருச்சிற்றம்பலம்.

குறிப்பு:—திருநெய்த்தானம்

இது சோழநாட்டிலுள்ளது, திருவையாறு சப்தஸ்தான தலங்களில் ஒன்று. சரஸ்வதி பூசித்துப் பேறுபெற்ற தலம். திருவையாற்றுக்கு ஒரு மைல் தூரத்தில் உள்ளது.

சுவாமி:—நெய்யாடியப்பர்
தேவியார்:—வாலாம்பிகை

## பதிகம் 16. திருப்புள்ளமங்கை

பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

பாலுந்துறு திரளாயின பரமன்பிர மன்றான்
போலுந்திற லவர்வாழ்தரு பொழில்சூழ்புள மங்கைக்
காலன்றிற லறச்சாடிய கடவுள்ளிடங் கருதில்
ஆலந்துறை தொழுவார்தமை யடையா வினைதானே. (1)

மலையான்மகள் கணவன்மலி கடல்சூழ்தரு தன்மைப்
புலையாயின களைவானிடம் பொழில்சூழ்புள மங்கைக்
கலையான்மலி மறையோரவர் கருதித்தொழு தேத்த
அலையார்புனல் வருகாவிரி யாலந்துறை யதுவே. (2)

கறையார்மிட றுடையான்கமழ் கொன்றைச்சடை முடிமேல்
பொறையார்தரு கங்கைப்புன லுடையான்புள மங்கைச்
சிறையார்தரு களிவண்டறை பொழில்சூழ்திரு வாலந்
துறையானவ னறையார்கழல் தொழுமின்துதி செய்தே. (3)

தணியார்மதி யரவின்னொடு வைத்தானிட மொய்த்தெம்
பணியாயவ னடியார்தொழு தேத்தும்புள மங்கை
மணியார்தரு கனகம்மவை வயிரத்திர ளோடும்
அணியார்மண லணைகாவிரி யாலந்துறை யதுவே. (4)

மெய்த்தன்னுறும் வினைதீர்வகை தொழுமின்செழு மலரின்
கொத்தின்னொடு சந்தாரகில் கொணர்காவிரிக் கரைமேல்
பொத்தின்னிடை யாந்தைபல பாடும்புள மங்கை
அத்தன்னமை யாள்வானிட மாலந்துறை யதுவே. (5)

மன்னானவ னுலகிற்கொரு மழையானவன் பிழையில்
பொன்னானவன் முதலானவன் பொழில்சூழ்புள மங்கை
என்னானவ னிசையானவ னிளஞாயிறின் சோதி
அன்னானவ னுறையும்மிட மாலந்துறை யதுவே. (6)

முடியார்தரு சடைமேன்முளை யிளவெண்மதி சூடிப்
பொடியாடிய திருமேனியர் பொழில்சூழ்புள மங்கைக்
கடியார்மலர் புனல்கொண்டுதன் கழலேதொழு தேத்தும்
அடியார்தமக் கினியானிட மாலந்துறை யதுவே. (7)

இலங்கைமனன் முடிதோளிற வெழிலார்திரு விரலால்
விலங்கல்லிடை யடர்த்தானிடம் வேதம்பயின் றேத்திப்
புலன்கடமை வென்றார்புக ழவர்வாழ்புள மங்கை
அலங்கன்மலி சடையானிட மாலந்துறை யதுவே. (8)

செறியார்தரு வெள்ளைத்திரு நீற்றின்றிரு முண்டப்
பொறியார்தரு புரிநூல்வரை மார்பன்புள மங்கை
வெறியார்தரு கமலத்தயன் மாலுந்தனை நாடி
அறியாவகை நின்றானிட மாலந்துறை யதுவே. (9)

நீதியறி யாதாரமண் கையரொடு மண்டைப்
போதியவ ரோதும்முரை கொள்ளார்புள மங்கை
ஆதியவர் கோயிற்றிரு வாலந்துறை தொழுமின்
சாதிம்மிகு வானோர்தொழு தன்மைபெற லாமே. (10)

பொந்தின்னிடைத் தேனூறிய பொழில்சூழ்புள மங்கை
அந்தண்புனல் வரகாவிரி யாலந்துறை யானைக்
கந்தம்மலி கமழ்காழியுட் கலைஞானசம் பந்தன்
சந்தம்மலி பாடல்சொலி யாடத்தவ மாமே. (11)

திருச்சிற்றம்பலம்

குறிப்பு:—திருப்புள்ளமங்கை

இத்தலம் வேளாள பசுபதிக் கோயில் எனவும், சிவபெருமான் விஷமுண்ட காரணத்தால் ஆலந்துறை எனவும் வழங்கப்பெறும். பிரமதேவர் பூசித்துப் பேறெய்தியது. திருப் பதிகத்திற் கூறியபடி கோபுரத்திற் கழுகுகளும் தேன்கூடுகளும் எண்ணிறந்தனவாக இப்போதும் காணப்படுகின்றன. திருச்சக்கரப்பள்ளி சப்த ஸ்தலங்களில் ஒன்று. இது திருஞானசம்பந்த சுவாமிகள் ஒருவரால் மாத்திரம் பாடல் பெற்றதாகும். சோழநாட்டில் அய்யன்பேட்டை ஸ்டேஷனுக்கு மேற்கே சுமார் இரண்டு மைல் தூரத்தில் அமைந்துள்ளது.

சுவாமி:—ஆலந்துறைநாதர்; பசுபதி நாதர்
தேவியார்:—அல்லியங்கோதை; பால்வளை நாயகி

## பதிகம் 17. திரு இடும்பாவனம்

### பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

மனமார்தரு மடவாரொடு மகிழ்மைந்தர்கண் மலர்தூய்த்
தனமார்தரு சங்கக்கடல் வங்கத்திர ளுந்திச்
சினமார்தரு திறல்வாளெயிற் றரக்கன்மிகு குன்றில்
இனமாதவ ரிறைவர்க்கிட மிடும்பாவன மிதுவே. (1)

மலையார்தரு மடவாளொரு பாகம்மகிழ் வெய்தி
நிலையார்தரு நிமலன்வலி நிலவும்புக ழொளிசேர்
கலையார்தரு புலவோரவர் காவன்மிகு குன்றில்
இலையார்தரு பொழில்சூழ்தரு மிடும்பாவன மிதுவே. (2)

சீலம்மிகு சித்தத்தவர் சிந்தித்தெழு மெந்தை
ஞாலம்மிகு கடல்சூழ்தரு முலகத்தவர் நலமார்
கோலம்மிகு மலர்மென்முலை மடவார்மிகு குன்றில்
ஏலங்கமழ் பொழில்சூழ்தரு மிடும்பாவன மிதுவே. (3)

பொழிலாற்தரு குலவாழைக ளெழிலார்திகழ் போதில்
தொழிலான்மிகு தொண்டரவர் தொழுதாடிய முன்றில்
குழலார்தரு மலர்மென்முலை மடவார்மிகு குன்றில்
எழிலார்தரு மிறைவர்க்கிட மிடம்பாவன மிதுவே. (4)

பந்தார்விர லுமையாளொரு பங்காகங்கை முடிமேல்
செந்தாமரை மலர்மல்கிய செழுநீர்வயற் கரைமேல்
கொந்தார்மலர் புன்னைமகிழ் குரவங்கமழ் குன்றில்
எந்தாயென விருந்தானிட மிடும்பாவன மிதுவே. (5)

நெறிநீர்மையர் நீள்வானவர் நினையுந்நினை வாகி
அறிநீர்மையி லெய்தும்மவர்க் கறியும்மறி வருளிக்
குறிநீர்மையர் குணமார்தரு மணமார்தரு குன்றில்
எறிநீர்வயல் புடைசூழ்தரு மிடும்பாவன மிதுவே. (6)

நீறேறிய திருமேனியர் நிலவும்முல கெல்லாம்
பாறேறிய படுவெண்டலை கையிற்பலி வாங்காக்
கூறேறிய மடவாளொரு பாகம்மகிழ் வெய்தி
ஏறேறிய விறைவர்க்கிட மிடும்பாவன மிதுவே. (7)

தேரார்தரு திகழ்வாளெயிற் றரக்கன்சிவன் மலையை
ஓராதெடுத் தார்த்தான்முடி யொருபஃதவை நெறித்துக்
கூரார்தரு கொலைவாளொடு குணநாமமுங் கொடுத்த
ஏரார்தரு மிறைவர்க்கிட மிடும்பாவன மிதுவே. (8)

பொருளார்தரு மறையோர்புகழ் விருத்தர்பொலி மலிசீர்த்
தெருளார்தரு சிந்தையொடு சந்தம்மலர் பலதூய்
மருளார்தரு மாயன்னயன் காணார்மய லெய்த
இருளார்தரு கண்டர்க்கிட மிடும்பாவன மிதுவே. (9)

தடுக்கையுட னிடுக்கித்தலை பறித்துச்சம ணடப்பார்
உடுக்கைபல துவர்க்கூறைக ளுடம்பிட்டுழல் வாரும்
மடுக்கண்மலர் வயல்சேர்செந்நெல் மலிநீர்மலர்க் கரைமேல்
இடுக்கண்பல களைவானிட மிடும்பாவன மிதுவே. (10)

கொடியார்நெடு மாடக்குன்ற ளூரிற்கரைக் கோல
இடியார்கட லடிவீழ்தரு மிடும்பாவனத் திறையை
அடியாயுமந் தணர்காழியு ளணிஞானசம் பந்தன்
படியாற்சொன்ன பாடல்சொலப் பறையும்வினை தானே. (11)

திருச்சிற்றம்பலம்

குறிப்பு:—திருஇடும்பாவனம்

இடும்பன் பூசித்துப் பேறெய்திய தொன்முகலின் இடும்பாவனம் என்ற பெயர் வாய்ந்தது. அகத்தியருக்குக் காக்ஷி கொடுத்த மகிமையையுடையது. வெள்ளை விநாயகர் திருக்கோயிலில் எழுந்தருளி யிருக்கின்றனர். இத்தலத்திற்கு இப்பதிகம் ஒன்றேயுண்டு. சோழநாட்டில் பாண்டி ஸ்டேஷனிலிருந்து சுமார் 4 மைல் தூரத்தில் உள்ளது.

சுவாமி:—சத்குணநாதர்
தேவியார்:—மங்களநாயகி

## பதிகம் 18. திருநின்றியூர்

பண்-நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

சூலம்படை சுண்ணப்பொடி சாந்தஞ்சுடு நீறு
பாலம்மதி பவளச்சடை முடிமேலது பண்டைக்
காலன்வலி காலின்னொடு போக்கிக்கடி கமழும்
நீலம்மலர்ப் பொய்கைநின்றி யூரின்னிலை யோர்க்கே. (1)

அச்சம்மிலர் பாவம்மிலர் கேடும்மில ரடியார்
நிச்சம்முறு நோயும்மிலர் தாமுந்நின்றி யூரில்
நச்சம்மிட றுடையார்நறுங் கொன்றைநயந் தாளும்
பச்சம்முடை யடிகள்திருப் பாதம்பணி வாரே. (2)

பறையின்னொலி சங்கின்னொலி பாங்காரவு மார
அறையும்மொலி யெங்கும்மவை யறிவாரவர் தன்மை
நிறையும்புனல் சடைமேலுடை யடிகணின்றி யூரில்
உறையும்மிறை யல்லதென துள்ளம்முண ராதே. (3)

பூண்டவ்வரை மார்பிற்புரி நூலன்விரி கொன்றை
ஈண்டவ்வத னோடும்மொரு பாலம்மதி யதனைத்
தீண்டும்பொழில் சூழ்ந்ததிரு நின்றியது தன்னில்
ஆண்டகழ றொழிலல்லது வறியாரவ ரறிவே. (4)

குழலின்னிசை வண்டின்னிசை கண்டுகுயில் கூவும்
நிழலின்னெழில் தாழ்ந்தபொழில் சூழ்ந்தநின்றி யூரில்
அழலின்வல னங்கையது வேந்தியன லாடுங்
கழலின்னொலி யாடும்புரி கடவுள்களை கண்ணே. (5)

மூரன்முறு வல்வெண்ணகை யுடையாளொரு பாகம்
சாரன்மதி யதனோடுடன் சலவஞ்சடை வைத்த
வீரன்மலி யழகார்பொழின் மிடையுந்திரு நின்றி
யூரன்கழ லல்லாதென துள்ளம்முண ராதே. (6)

பற்றியொரு தலைகையினி லேந்திப்பலி தேரும்
பெற்றியது வாகித்திரி தேவர்பெரு மானார்
சுற்றியொரு வேங்கையத ளோடும்பிறை சூடும்
நெற்றியொரு கண்ணார்நின்றி யூரின்னிலை யாரே. (7-8)

நல்லம்மலர் மேலானொடு ஞாலம்மது வுண்டான்
அல்லரென வாவரென நின்றும்மறி வரிய
நெல்லின்பொழில் சூழ்ந்தநின்றி யூரின்னிலை யாரெஞ்
செல்வரடி யல்லாதென சிந்தையுண ராதே. (9)

நெறியில்வரு பேராவகை நினையாநினை வொன்றை
அறிவில்சம ணாதருரை கேட்டும்மய ராதே
நெறியில்லவர் குறிகண்ணினை யாதேநின்றி யூரில்
மறியேந்திய கையானடி வாழ்த்தும்மது வாழ்த்தே. (10)

குன்றம்மது வெடுத்தா னுடல் தோளுந்நெரி வாக
நின்றங்கொரு விரலா லுற வைத்தானின்றி யூரை
நன்றார்தரு புகலித்தமிழ் ஞானம்மிகு பந்தன்
குன்றாத்தமிழ் சொல்லக்குறை வின்றிநிறை புகழே. (11)

திருச்சிற்றம்பலம்

## குறிப்பு:—திருநின்றியூர்

இத்தலம் சோழநாட்டில் உள்ளது. இலக்குமி பூசித்துப் பேறெய்திய தலம் என்றும், ஈண்டு ஒருகால் சோழன் ஒருவனுக்குத் தீவர்த்தியாய திரியொன்றில் லிங்க ஜோதித் தரிசனம் கிடைக்கப்பெற்றமையால் திரிநின்றவூர் என்று வழங்கப்பட்டதென்றும், நாளடைவில் திருநின்றியூர் என்று மருவியதென்றும் மான்மியங்கள் கூறுகிற்கும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது திருப்பதிகத்தில் தென்றிருநின்றியூரானே என்று திருவாக்கிட்டிருக்கின்றமையான் சோழநாட்டிலுள்ள இத்திருத்தலத்தையே திருநின்றியூர் என்ற பதம் குறிப்பிடுவதாகும். அஃதன்றி தொண்டை நாட்டில் ஆவடிக்குச் சமீபத்திலுள்ள தின்னனூர் என்ற தலம் திருநின்றியூர் என்ற பெயரினின்றும் மருவியது என்று கூறி இடர்ப்படுவாருமுளர். பெரிய புராணத்தில் பூசலார் நாயனார் சரித்திரத்தை இயற்றியருளிய சேக்கிழார்ப் பெருந்தகையார் இத்

தலத்தை "நின்றவூர்" என்றே குறிப்பிடுவதாகலான், தின்னனூர் என வழங்கும் இவ்வூர்ப் பாடல் பெறாத தொன்றாகும் என்பது வெளியாகின்றது. மற்று, சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேன்றிருநின்றியூரானே என்று இசைத்தாராகலின் வடநாட்டில் அத்தகைய பெயர்கொண்ட தலமொன்று அவர்தங் கவனத்து இருந்திருக்கலாம். ஆயின், தற்போது ஆசாரிய சுவாமிகளுடைய பாடல்களில் ஒன்றேனும் தின்னனூர் என்னும் நின்றவூர்க்கு அகப்படாமையினாலும், வைப்புத்தலங்களில் ஒன்றாகவேனும் அது காணப்படாமையினாலும், பூசலார் நாயனார் ஆலயப் பிரதிட்டை செய்த பெருமையொன்றே தின்னனூருக்கு உரியதாகலானும், பாடல் பெற்ற திருநின்றியூர் அஃதன்று என்பது துணிபு.

திருநின்றியூர் சோழநாட்டில் ஆனைதாண்டபுரம் ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே 2 மைலில் உள்ளது.

சுவாமி:—மகாலக்ஷ்மி நாதர்
தேவியார்:—உலகநாயகியம்மை

---

## பதிகம் 19. திருக்கழுமலம்

## திருவிராகம்

பண்-நட்டபாடை

---

திருச்சிற்றம்பலம்

பிறையணிபடர்சடை முடியிடைபெருகிய புனலுடையவனிறை
இறையணிவளையிணை முலையவளிணைவன தெழிலுடையிடவகை
கறையணிபொழினிறை வயலணிகழுமல மமர்கனலுருவினன்
நறையணிமலர்நறு விரைபுல்குநலமலி கழறொழன்மருவுமே. (1)

பிணிபடுகடல்பிற விகளறலெளிதுள ததுபெருகியதிரை
அணிபடுகழுமல மினிதமரனலுரு வினனவிர்சடைமிசை
தணிபடுகதிர்வள ரிளமதிபுனைவனை யுமைதலைவனைநிற
மணிபடுகறைமிட றனைநலமலிகழ லிணைதொழன்மருவுமே. (2)

வரியுறுபுலியத் ளுடையினன்வளர்பிறை யொளிகிளர்கதிர்பொதி
விரியுறுசடைவிரை புரைபொழில்விழவொலி மலிகழுமலமமலர்
எரியுறுநிறவிறை வனதடியிரவொடு பகல்பரவுவர்தம
தெரியுறுவினைசெறி கதிர்முனையிருள்கெட நனிநினை வெய்துமதே (3)

வினைகெடமனநினை வதுமுடிகெனினனி தொழுதெழுகுலமதி
புனைகொடியிடைபொரு ட்ருபடுகளிறின துரிபுதையுடலினன்
மனைகுடவயிறுடை யனசிலவருகுறள் படையுடையவன்மலி
கனைகடலடைகழுமல மமர்கதிர்மதி யினனதிர்கழல்களே. (4)

தலைமதிபுனல்விட வரவிவைதலைமைய தொருசடையிடையுடன்
நிலைமருவவொரிட மருளினனிழன்மழு வினொடழல்கணையினன்
மலைமருவியசிலை தனின்மதிலெரியுண மனமருவினனல
கலைமருவியபுற வணிதருகழுமல மினிதமர்தலைவனே. (5)

வரைபொருதிழியரு விகள்பலபருகொரு கடல்வரிமணலிடை
கரைபொருதிரையொலி கெழுமியகழுமல மமர்கனலுருவினன்
அரைபொருபுலியத ளுடையினனடியிணை தொழவருவினையெனும்
உரைபொடிபடவுறு துயர்கெடவுயருல கெய்தலொருதலைமையே()

முதிருறுகதிர்வள ரிளமதிசடையனை நறநிறைதலைதனில்
உதிருறுமயிர்பிணை தவிர்தசையுடைபுலி யதனிடையிருள்கடி
கதிருறுசுடரொளி கெழுமியகழுமல மமர்மழுமலிபடை
அதிருறுகழலடி களதடிதொழுமறி வலதறிவறியமே. (7)

கடலெனநிறநெடு முடியவனடுதிற றெறவடிசரணென
அடனிறைபடையரு ளியபுகழரவரை யினனணிகிளர்பிறை
விடநிறைமிடறுடை யவன்விரிசடையவன் விடையுடையவனுமை
உடனுறைபதிகடன் மறுகுடையுயர்கழு மலவியனகரதே. (8)

கொழுமலருறைபதி யுடையவனெடியவ னெனவிவர்களுமவன்
விழுமையையளறி கிலரிறைவிரைபுணர் பொழிலணிவிழவமர்
கழுமலமமர்கன லுருவினனடியிணை தொழுமவரருவினை
எழுமையுமிலநில வகைதனிலெளிதிமை யவர்வியனுலகமே. (9)

அமைவனதுவரிழு கியதுகிலணியுடை யினரமணுருவர்கள்
சமையமுமொருபொரு ளெனுமவைசலநெறி யனவறவுரைகளும்
இமையவர்தொழுகழு மலமமரிறைவன தடிபரவுவர்தமை
நமையலவினைநல னடைதலிலுயர்நெறி நனிநணுதுவர்களே. (10)

பெருகியதமிழ்விர கினன்மலிபெயரவ னுறைபிணர்திரையொடு
கருகியநிறவிரி கடலடைகழுமல முறைவிடமெனநனி
பெருகியசிவனடி பரவியபிணைமொழி யனவொருபதுமுடன்
மருவியமனமுடை யவர்மதியுடையவர் விதியுடையவர்களே. (11)

திருச்சிற்றம்பலம்

கழுமலம் என்பது . சீகாழி

---

## பதிகம் 20. திருவீழிமிழலை

### திருவிராகம்

பண் - நட்டபாடை

---

திருச்சிற்றம்பலம்

தடநிலவியமலை நிறுவியோர்தழலுமிழ் தருபடவரவுகொ
டடலசுரரொடம ரர்களலைகடல்கடை வுழியெழுமிகுசின
விடமடைதருமிட றுடையவன்விடைமிசை வருமவனுறைபதி
திடமலிதருமறை முறையுணர்மறையவர் நிறைதிருமிழலையே. (1)

தரையொடுதிவிதல நலிதருதகுதிற லுறுசலதரனது
வரையனதலைவிசை யொடுவருதிகிரியை யரிபெறவருளினன்
உரைமலிதருசுர நதிமதிபொதிசடை யவனுறைபதிமிகு
திரைமலிகடன்மண லணிதருபெறுதிடர் வளர்திருமிழலையே. (2)

மலைமகடனையிகழ் வதுசெய்தமதியறு சிறுமனவனதுயர்
தலையினொடழலுரு வனகரமறமுனி வுசெய்தவனுறைபதி

கலைநிலவியபுல வர்களிடர்களை தரு கொடைபயில்பவர்மிகு
சிலைமலிமதிள்புடை தழுவியதிகழ்பொழில் வளர்திருமிழலையே. (3)

மருவலர்புரமெரி யினின்மடி தரவொரு கணைசெலநிறுவிய
பெருவலியினனல மலிதருகரனுர மிகுபிணமமர்வன
இருளிடையடையுற வொடுநடவிசையுறு பரனினிதுறைபதி
தெருவினில்வருபெரு விழவொலிமலிதர வளர்திருமிழலையே. (4)

அணிபெறுவடமர நிழலினிலமர்வொடு மடியிணையிருவர்கள்
பணிதரவறநெறி மறையொடுமருளிய பரனுடைவிடமொளி
மணிபொருவருமர கதநிலமலிபுன லணைதருவயலணி
திணிபொழிறருமண மதுநுகரறுபத முரறிருமிழலையே. (5)

வசையறுவலிவன சரவுருவதுகொடு நினைவருதவமுயல்
விசையனதிறன்மலை மகளறிவுறுதிற லமர்மிடல்கொடுசெய்து
அசைவிலபடையருள் புரிதருமவனுறை பதியதுமிகுதரு
திசையினின்மலர்குல வியசெறிபொழின்மலி தருதிருமிழலையே. (6)

நலமலிதருமறை மொழியொடுநதியுறு புனல்புகையொளிமுதன்
மலரவைகொடுவழி படுதிறன்மறையவ னுயிரதுகொளவரு
சலமலிதருமற லிதனுயிர்கெடவுதை செய்தவரனுறைபதி
திலகமிதெனவுல குகள்புகழ்தருபொழி லணிதிருமிழலையே. (7)

அரனுறைதருகயி லையைநிலைகுலைவது செய்ததசமுகனது
கரமிருபதுநெரி தரவிரனிறுவிய கழலடியுடையவன்
வான்முறையுலகவை தருமலர்வளர்மறை யவன்வழிவழுவிய
சிரமதுகொடுபலி திரிதருசிவனுறை பதிதிருமிழலையே. (8)

அயனொடுமெழிலமர் மலர்மகண்மகிழ்கண னளவிடலொழியவொர்
பயமுறுவகைதழ னிகழ்வதொர்படியுரு வதுவரவரன்முறை
சயசயவெனமிகு துதிசெயவெளியுரு வியவவனுறைபதி
செயநிலவியமதின் மதியதுதவழ்தர வுயர்திருமிழலையே. (9)

இகழுருவொடுபறி தலைகொடுமிழிதொழின் மலிசமண்விரகினர்
திகழ்துவருடையுடல் பொதிபவர்கெடவடி யவர்மிகவருளிய

புகழுடையிறைபுறை பதிபுனலணிகடல் புடைதழுவியபுவி
திகழ்சுரர்தருநிகர் கொடையினர்செறிவொடு திகழ்திருமிழலையே. ()

சினமலிகரியுரி செய்தசிவனுறைதரு திருமிழலையைமிகு
தனமனர்சிரபுர நகரிறைதமிழ்விர கனதுரையொருபதும்
மனமகிழ்வொடுபயில் பவரெழின்மலர்மகள் கலைமகள்சயமகள்
இனமலிபுகழ்மக ளிசைதரவிருநில னிடையினிதமர்வரே. (11)

திருச்சிற்றம்பலம்

---

## பதிகம் 21. திருச்சிவபுரம்
## திருவிராகம்

பண் - நட்டபாடை

---

திருச்சிற்றம்பலம்

புவம்வளிகனல்புனல் புவிகலையுரைமறை திரிகுணமமர்நெறி
திவமலிதருசுரர் முதலியர்திகழ்தரு முயிரவையவைதம
பவமலிதொழிலது நினைவொடுபதுமநன் மலரதுமருவிய
சிவனதுசிவபுர நினைபவர்செழுநில னினினிலைபெறுவரே. (1)

மலைபலவளர்தரு புவியிடைமறைதரு வழிமலிமனிதர்கள்
நிலைமலிசுரர்முத லுலகுகணிலைபெறு வகைநினைவொடுமிகும்
அலைகடனடுவறி துயிலமரரியுரு வியல்பரனுறைபதி
சிலைமலிமதிள்சிவ புரநினைபவர்திரு மகளொடுதிகழ்வரே. (2)

பழுதிலகடல்புடை தழுவியபடிமுத லியவுலகுகண்மலி
குழுவியசுரர்பிறர் மனிதர்கள்குலமலி தருமுயிரவையவை
முழுவதுமழிவகை நினைவொடுமுதலுரு வியல்பரனுறைபதி
செழுமணியணிசிவ புரநகர்தொழுமவர் புகழ்மிகுமுலகிலே. (3)

நறைமலிதருமள வொடுமுகைநகுமலர் புகைமிகுவளரொளி
நிறைபுனல்கொடுதனை நினைவொடுநியதமும் வழிபடுமடியவர்

குறைவிலபதமணை தரவருள்குணமுடை யிறையுறைவனபதி
சிறைபுனலமர்சிவ புரமதுநினைபவர் செயமகடலைவரே. (4)

சினமலியறுபகை மிகுபொறிசிதைதரு வகைவளிநிறுவிய
மனனுணர்வொடுமலர் மிசையெழுதருபொரு ணியதமுமுணர்பவர்
தனதெழிலுருவது கொடுவடைதகுபர னுறைவதுநகர்மதிள்
கனமருவியசிவ புரநினைபவர்கலை மகடாரநிகழ்வரே. (5)

சுருதிகள்பலநல முதல்கலைதுகளறு வகைபயில்வொடுமிகு
உருவியலுலகவை புகழ்தரவழியொழு குமெயுறுபொறியொழி
அருதவமுயல்பவர் தனதடியடைவகை நினையரனுறைபதி
திருவளர்சிவபுர நினைபவர்திகழ்குல னிலனிடைநிகழுமே. (6)

கதமிகுகருவுரு வொடுவுகிரிடவட வரைகணகணவென
மதமிகுநெடுமுக னமர்வளைமதிதிக ழெயிறதனுதிமிசை
இதமமர்புவியது நிறுவியவெழிலரி வழிபடவருள்செய்த
பதமுடையவனமர் சிவபுரநினைபவர் நிலவுவர்படியிலே. (7)

அசைவுறுதவமுயல் வினிலயனருளினில் வருவலிகொடுசிவன்
இசைகயிலையையெழு தருவகையிருபது கரமவைநிறுவிய
நிசிசரன்முடியுடை தரவொருவிரல்பணி கொளுமவனுறைபதி
திசைமலிசிவபுர நினைபவர்செழுநில னினினிகழ்வுடையரே. (8)

அடன்மலிபடையரி யயனொடுமறிவரி யதொரழன்மலிதரு
சுடருருவொடுநிகழ் தரவவர்வெருவொடு துதியதுசெயவெதிர்
விடமலிகளநுத லமர்கணதுடையுரு வெளிபடுமவனகர்
திடமலிபொழிலெழில் சிவபுரநினைபவர் வழிபுவிதிகழுமே. (9)

குணமறிவுகணிலை யிலபொருளுரைமரு வியபொருள்களுமில
திணமெனுமவரொடு செதுமதிமிகுசம ணருமலிதமதுகை
உணலுடையவருணர் வருபரனுறைதரு பதிபுலகினினல
கணமருவியசிவ புரநினைபவரெழி லுருவுடையவர்களே. (10)

திகழ்சிவபுரநகர் மருவியசிவனடி யிணைபணிசிரபுர
நகரிறைதமிழ்விர கனதுரைநலமலி யொருபதுநவில்பவர்

நிகழ்குலநிலநிறை திருவுருநிகரில கொடிமிசுசயமகள்
புகழ்புவிவளர்வழி யடிமையின்மிகைபுணர் தரநலமிகுவரே. (11)

திருச்சிற்றம்பலம்

குறிப்பு —திருச்சிவபுரம்

முன்னொருகால் ஆழியில் மறைந்த இவ்வுலகினைத் திருமால் வெள்ளைப் பன்றி வுருவினராய்த் தமது கோரதந்தத்தின் மீது உயர்த்தித் தாங்கி இத்தலத்தில் சிவபெருமானைப் பூசித்துப் பேறெய்தினர். இக்குறிப்பினைச் சம்பந்த மூர்த்திகளே யன்றி மாணிக்கவாசக சுவாமிகளும் தமது அருமைத் திருவாக்கினிற் கண்டிருக்கின்றனர். இந்த ஐதிகம் மதிற்புறத்தினும் குறிப்பிட்டிருப்பதாகக் கூறுவர். மற்று இத்தலத்தில் செண்பக மலர்ப்பொழில்கள் எண்ணிறந்தனவாக இருந்தனவெனினும் தற்போது திருமுன்றிலின் புறத்தில் ஒரு சண்பக மரம் மிகவோங்கித் தண்ணிழல் அளித்துத் தல விருக்ஷமாக விளங்கா நிற்கும்.

இத் திருச்சிவபுரம் சோழநாட்டில் கும்பகோணத்துக்குத் தென்கிழக்கே 3 மைல் தூரத்தில் அமைந்திருக்கின்றது.

சுவாமி:—பிரமபுரிநாதர்
தேவியார்:—பெரியநாயகியம்மை
திருவிருஷம்:—சண்பகம்

---

23:4172
N27
800 009
175266

# திருமலைப் பிள்ளைத் தமிழ்.

செங்கோட்டைக்கு அணித்தாயுள்ள திருமலையில் எழுந்தருளியிருக்கும் முருகப் பிரானின் மீது கவிராஜ பண்டாரத்தையா அவர்கள் இயற்றிய பிள்ளைத் தமிழ்ப் பல வருஷங்களுக்கு முன் வெளியிடப்பட்டது ஆகையாலும் சுத்தமான பதிப்பு இப்போது அகப்படாமையினாலும் இப்பிள்ளைத் தமிழ் முத்துப்போன்ற எழுத்துக்களில் பளபளப்பான உயர்ந்த வெள்ளைக் கடிதங்களில் முருகனுடைய அழகிய திருவுருவப் படத்துடன் வெளியிட்டிருக்கின்றனம். வித்வான் ஸ்ரீமாந் - சி. வே. விவேகாநந்த முதலியாரவர்கள் இதற்கு உபகரித்துள்ள முன்னுரையில், பிள்ளைத் தமிழ் என்றால் என்ன, அது எத்தனை வகைத்து, அதன் இலக்கண விசேஷம் முதலியவற்றையும் முருகன் பிறப்பு, திருவிளையாடல்கள், மேன்மை முதலிய எல்லா வைபவங்களையும் யாவரும் இனிது படித்து உணருமாறு செந்தமிழ் நடையில் சிறக்க எழுதியிருக்கின்றார்கள். உருக்கமான பல பாக்களடைந்த இந்நூல், விசேடமான முகவுரையின் எல்லாச் சிவநேயர்களுக்கும் மிகவும் இன்றியமையாததாக விரும்பப்படுவதாகும். யாவரும் வாங்கிப் படிப்பதற்காக இப்பிள்ளைத் தமிழைச் சொற்ப விலையாகிய ஐந்து அணாவுக்கு விற்று வருகின்றனம்.

---

# சிவபோற்றித் தொகுதி.

இது சென்னைச் சித்தாந்தப் பிரகாச சபைக் காரியதரிசி திருவாளர் C. இராஜரத்தின முதலியார் அவர்களால் தேவார திருவாசகங்களிலிருந்து போற்றி முறையாகத் தொகுத்து வெளியிடப்பட்டிருக்கின்றது. ஸ்ரீமான் வித்வான் சி வே விவேகாநந்த முதலியாரவர்களுடைய இனிமையான முகவுரையும் கூடியது. ஆரியர் வாய்ப்பாட்டிலே காலங்கழித்தும் சிவநேயர் யாவருக்கும் இது இன்றியமையாதது. விலை அணா ஒன்றே

எப்புத்தகங்கள் வேண்டுமேனினும் எம்மிடம் கிடைக்கும்.

நமது புத்தகங்கள் அகப்படுமிடம்:—

1. S. யூகநாத முதலியாரவர்கள், 215, தங்கசாலை வீதி சென்னை.
2. E. S. புண்ணியகோடி முதலியாரவர்கள், இந்திரா பிரிண்டிங் ஒர்க்ஸ், பத்ரையன் தெரு, சென்னை.

---

M. V. அம்பாள் தாசன் கம்பெனி

**சித்தாந்த நூற்பதிப்பு நிலையம்**

இராயப்பேட்டை, போஸ்டு, சென்னை.

மூவர்

# தேவாரத் திருமுறை

ஒவ்வொரு வீட்டிலேயும் வைத்து பூசிக்கத்தக்கது

(புதிய பதிப்பு)

சைவ சமய ஆசாரியர்கள் திருவாய்மலர்ந்தருளிய தமிழ் வேதம், சின்னாளும் சிறுதொழிலுமுடைய ஆன்மாக்களின் மலத்தை நீக்கிப் பேரானந்தப் பெருவாழ்வை அளிக்கவல்லதோர் தெய்வவைப்பு என்பதை யறிந்தும் நாம் அவைகளைப் பாராயணஞ்செய்து வழிபடாமல் இருந்து வருவது நமது குறையேயாம். பல செந்தமிழ்ச் சைவாபிமானிகள் வெளியிட்ட நூற்றொகுதிகள் காலப்போக்கில் அரிதாகி விட்டமையால் புதிய பதிப்புக்கள் மிகவும் குறைந்த விலையில் வெளியிட்டுபகரிக்கும் ஆவசியகம் ஏற்படுவதாயிற்று. முதன் மூவர் திருவாய் மலர்ந்தருளிய தேவாரப்பதிப்புக்கள் சிலகாலமாக அகப்படாமையினால் மாதமொருமுறை சஞ்சிகை மூலமாக டெம்மி 8 பக்க அளவில் 64-பக்கங்களாக வெண்மையான கடிதத்தில் புதிய எழுத்துக்களினால் வித்வான் ஸ்ரீமான் சி. வே. விவேகாநந்த முதலியார் அவர்களைக் கொண்டு பரிசோதிக்கச் செய்து வெளியிட ஆரம்பத்திருக்கின்றேன். இப்பதிப்பில் சுவாமிகளின் திருவுருவங்கள், திருமுறைகண்ட வரலாறு, திருமுறையின் பெருமை, தலத்தின்வரலாறு, பதிகவரலாறு, பாடபேதங்கள், திருப்பாட்டின் அகராதி, திருத்தலத்தின் அகராதி முதலிய முக்கிய விஷயங்கள் யாவும் அடங்கும். இது இருபது சஞ்சிகையில் முடிவு பெறும். மாதந்தோறும் தவறாமல் முதல் தேதிக்குள் சஞ்சிகை வெளிவந்து விடுமாகையால் சிவநேயச்செல்வர்கள் யாவரும் இதற்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து இப்புதிய பதிப்பைப் பெற்றுப் பெரும்பயனடையும்படி பெரிதும் வேண்டுகின்றனம்.

## மாத சஞ்சிகைக்கு அணா ஐந்து

20 சஞ்சிகைகளடங்கிய முழு பதிப்புக்கு முன்பணம்

ரூபா. 5—8—0.

வெளியூர்களுக்கு தபால் கூலி வேறு

குறிப்பு:—புற தேசத்தார் புத்தகம்வேண்டிக் கடிதமெழுதும் விஷயத்தில் தங்கள் ஊர் பெயர் தெருக் கதவிலக்கம் கண்டெழுதவும். நட்பெயிட்டாக அனுப்பினால் திருப்பிவிடப்படும். கடிதத்திற்குப் பதில் வேண்டியவர்கள் ரிப்ளை கார்டு அல்லது ஸ்டாம்பு லேபில் உள்ளடக்கஞ் செய்தனுப்ப வேண்டும்.

பதிப்பாசிரியர் :—

பண்டித, புதுவை-முத்துவடிவேலானந்தம்

M. V. அம்பாள் தாசன் கம்பெனி

சித்தாந்த நூற்பதிப்பு நிலையம்

இராயப்பேட்டை போஸ்டு, சென்னை.

9A
11-1